# தகவல் தொழில்நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2015–2016

## மானியக் கோரிக்கை எண்.31


## முக்கூர் என். சுப்பிரமணியன்

**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2015

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2015–2016

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I | முன்னுரை | 1–3 |
| II | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் | 4–24 |
| | தகவல் தொழில்நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்) | 5–18 |
| | வன்பொருள் கொள்முதல் | 18–19 |
| | மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் | 19–20 |
| | அரசு இ–சேவை மையங்கள் (Arasu eSevai Centres) | 21–22 |
| | மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்கான மேகக் கணினி சார்ந்த சேவைகள் (Cloud and web hosting services to students and Young Entrepreneurs) மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள் | 22–23 |

| | | |
|---|---|---|
| | கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள் (Business Process Outsourcing (BPO) | 23–24 |
| III | தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு | 25–39 |
| | தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network -TNSWAN) | 26–30 |
| | அகன்ற அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity) / இணைய குத்தகை இணைப்பு (Internet leased line) | 30–31 |
| | தமிழ்நாடு மாநில தரவு மையம் (Tamil Nadu State Data Centre- TNSDC) | 31–33 |
| | கணினி சர்வர் பண்ணை (Server Farm) | 33–34 |
| | தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network - NKN) | 34–35 |
| | பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre and Nearline Disaster Recovery Centre ) | 36–37 |
| | மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு (Cloud Computing Set up at TNSDC) | 37–39 |
| | மின்னஞ்சல் தொகுப்பு | 39 |

| | | |
|---|---|---|
| IV | மின்னாளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | 40–63 |
| | நிறுவன வடிவமைப்பு | 42–47 |
| | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை குழு | 43 |
| | நிறுவன வடிவமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு | 44–45 |
| | மாநில மின் குறிக்கோள் குழு (SeMT) | 46 |
| | மாவட்ட மின் ஆளுமை சங்கம் (DeGS) | 46–47 |
| | மின் மாவட்டத் திட்டம் | 48–53 |
| | அரசு இ–சேவை மையங்கள் (Arasu eSevai Centres) | 53–55 |
| | மாநில சேவை இணையதளம், மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (State Portal, State Services Delivery Gateway) | 55 |
| | திறன் மேம்பாடு (Capacity Building) | 56–59 |
| | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு | 59–61 |
| | மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (STATE RESIDENT DATA HUB) | 61–63 |
| | மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல் | 63 |

| | | |
|---|---|---|
| V | 2014–2015 ஆம்ஆண்டின் சிறப்பம்சங்கள் | 64–70 |
| | அரசுத் துறைகளுக்கான “மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது” | 64 |
| | மாணவர்களுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது | 64–65 |
| | சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழ் நாடு அரசின் மின்னாளுமை விருது. | 65 |
| | தகவல் தொழில் நுட்ப பாதுகாப்பு தணிக்கை | 65–66 |
| | இணையதள சேவை விளக்கக் கோப்பகம் | 66 |
| | திட்டக் கண்காணிப்பு மென்பொருள் | 67 |
| | அரசு அலுவலர்களுக்கான மின்–கற்றல் பாடங்கள் | 67–68 |
| | மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதி | 68 |
| | குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி | 68–69 |
| | திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் | 69–70 |

| | | |
|---|---|---|
| VI | 2014–2015ஆம் ஆண்டின்சாதனைகள் | 71–73 |
| | மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நடைமுறைக்கான விருது 2015 | 71 |
| | eTaal | 71–72 |
| | மின்மாவட்டங்கள் | 72 |
| | வெப் ரத்னா” விருது | 73 |
| VII | தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICTACT) | 74–89 |
| VIII | தமிழ் இணையக் கல்விக்கழகம் | 90–111 |
| IX | தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் | 112–128 |

# அத்தியாயம் – I

# முன்னுரை

தமிழ்நாடு, இந்தியாவின் மிகவும் முற்போக்கான அறிவுசார் மாநிலங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு ஆவணம்–2023–ன்படி, பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வலிமை மற்றும் சிறந்த மனித திறமையின் அடிப்படையில், தமிழகம் இந்தியாவின் கண்டுபிடிப்பு மையமாகவும் (Innovation Hub), அறிவு மூலதனமாகவும் (Knowledge Capital) திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குடிமக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும் சிறந்த வகையிலும் அளிக்கும் வகையிலும் வேகமான பரிமாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு சிறந்த தகவல் கட்டமைப்பை ஏற்படுத்தி வருகிறது.

நவீன தொழில்துறையின் தேவைக்கேற்ப தமிழ்நாடு திறன்வாய்ந்த மனித வளத்தைப் பெற்றுள்ளது. வங்கியியல், நிதி சேவைகள் மற்றும் காப்பீடு (Financial Services and Insurance,BFSI) , சுகாதார திட்ட மேலாண்மை, கணினி சார்ந்த



வடிவமைப்பு (Computer Aided Designing, CAD) மற்றும் கணினி சார்ந்த பொறியியல் (Computer Aided Engineering, CAE) போன்ற தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள்(ITES) துறையில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மாநிலமாகவும் தமிழ்நாடு உருவாகியுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையானது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் தொழிலை மேம்படுத்துவதற்கும் மின்னாளுமையை ஊக்குவிப்பதற்கும் அமைக்கப்பட்ட துறையாகும்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை பின்வரும் நோக்கங்களுடன் தொடங்கப்பட்டது.

- **இணையம் வாயிலாக அரசின் தகவல் மற்றும் பரிமாற்றம் சார்ந்த சேவைகளை குடிமக்களின் இருப்பிடத்திலேயே அளித்தல்,**
- **கிராம மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல்,**

- **தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆளுமையில் தமிழகத்தை சிறந்த மாநிலமாக ஆக்குதல்,**
- **தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமாக உயர்த்துதல்,**
- **நியாயமான கட்டணத்தில் கேபிள் டிவி சேவைகளை தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் அளித்தல்,**
- **இணையம் வாயிலாக தமிழை கற்பித்தல் மற்றும் கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுதல்,**
- **குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக உயர்த்துதல்.**



## அத்தியாயம் – II

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டம் **1956**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாகும். மின்னணு தொழில் துறையை முன்னேற்றும் பணிக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் கரமாக தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் துறைகள், அரசு மற்றும் அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் இதர அரசு வாரியங்களுக்கும் தகவல் தொழில்நுட்பவியல் பிரிவில் உதவிக்கரம் நீட்டி வருகிறது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் வன்பொருள் கொள்முதல், மென்பொருள் தயாரிப்பு, தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த மிகப்பெரிய திட்டங்கள் மற்றும் இந்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு முன்னோடி விருப்ப முகமையாக (optional procurement agency) செயலாற்றி வருகின்றது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநில

தரவு மையம் (TNSDC) போன்ற திட்டங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைத்துள்ளது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை **"எல்கோசெஸ்"** (ELCOSEZ) என்று முத்திரைப் பெயராக அறிவித்ததன் மூலம், அவற்றை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அது சார்ந்த சேவை வழங்கும் நிறுவனங்களின் முதலீடுகளுக்கான சிறந்த, உகந்த தேர்வாக உருவாக்கப் படுவதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்)

அரசின் கொள்கைபடி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில்கள் தமிழ்நாடு முழுவதும் பரவி வளர ஏதுவாக, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை **(எல்கோசெஸ்கள்)** சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (இரண்டு இடங்கள்),



திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய **8** இடங்களில் அமைத்துள்ளது.

## எல்கோசெஸ்– சோழிங்கநல்லூர், சென்னை

சோழிங்கநல்லூர் எல்கோசெஸ் **377.08** ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.**194** கோடி ஆகும். இதில் ரூ.**43.26** கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் குறித்த விவரங்கள் | திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் – **80** ஏக்கர்<br>திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம் –**50** ஏக்கர்<br>திருவாளர்கள் சத்யம் நிறுவனம் –**50** ஏக்கர்<br>திருவாளர்கள் சதர்லேண்ட் நிறுவனம் –**15** ஏக்கர்<br>திருவாளர்கள் சிடிஎஸ் நிறுவனம் –**20** ஏக்கர் |

| ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் தற்போதைய கட்டங்களின் நிலை மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் | **நிறுவனத்தின் பெயர்கள்** | **கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டுள்ள பரப்பளவு (சதுர அடி)** | **பணியாளர்எண்ணிக்கை** |
|---|---|---|---|
| | திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் | 19 இலட்சம் | 19,000 |
| | திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம் | 22 இலட்சம் | 12,000 |
| | திருவாளர்கள் சத்யம் நிறுவனம் | 6.25 இலட்சம் 2.00 இலட்சம் (கட்டட பணிகள் நடைபெற்று வருகிறது) | 4,200 |
| | திருவாளர்கள் சிடிஎஸ் நிறுவனம் | 28 இலட்சம் (18,000 நபர்கள் அமர்வதற்கு ஏற்ப வசதி) | 3,500 |

## எல்கோசெஸ்—விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

இந்த விளாங்குறிச்சி எல்கோசெஸ் 62 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய



ரூ.70 கோடி ஆகும். இதில் ரூ.19 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் குறித்த விவரங்கள் | திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் –9.50 ஏக்கர்<br>திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் – 9.50 ஏக்கர் | | |
| ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள நிறுவனங் களின் தற்போதைய கட்டங்களின் நிலை மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் | **நிறுவனத்தின் பெயர்கள்** | **கட்டடம் கட்டிமுடிக்கப் பட்டுள்ள பரப்பளவு (சதுர அடி)** | **பணியாளர் எண்ணிக்கை** |
| | திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் | 3.5 இலட்சம் | 300 |
| | திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் | 17 இலட்சம் (7.12 இலட்சம் சதுர அடி | 6,000 |

| | | | |
|---|---|---|---|
| | | பரப்பளவில் 26 தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் 16 சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன) | |

## எல்கோசெஸ்–இலந்தைகுளம் மதுரை

இலந்தைகுளம் எல்கோசெஸ் 28.91 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.34.41 கோடி ஆகும். இதில் ரூ.24 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.



| | | | |
|---|---|---|---|
| குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் விவரங்கள் | திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலிஜிஸ் நிறுவனம் – 4.50 ஏக்கர்<br>திருவாளர்கள் செல்லா சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் –2.25 ஏக்கர்<br>திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம் –6.75 ஏக்கர் | | |
| ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் தற்போதைய கட்டடங்களின் நிலை மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் | **நிறுவனத்தின் பெயர்கள்** | **கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டுள்ள பரப்பளவு (ச.அ)** | **பணியாளர்களின் எண்ணிக்கை** |
| | திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலிஜிஸ் நிறுவனம் | 50,000 | 300 |
| தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் | திருவாளர்கள் கேலக்சி இன்போடெக் நிறுவனம் – 2,508 சதுர அடி<br>திருவாளர்கள் ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் – 3,277 சதுர அடி<br>திருவாளர்கள் சாய் பி.பி.ஓ சர்வீசஸ் லிமிடெட் நிறுவனம் – 15,181 சதுர அடி | | 30<br>15<br>310 |

| | | |
|---|---|---|
| நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தின் அளவுகள் | திருவாளர்கள் நியாமோ எண்டர்பிரைசஸ் சொலுயூஸன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் –30,120 சதுர அடி | 100 |

## எல்கோசெஸ்–வடபழஞ்சி, மதுரை

இந்த வடபழஞ்சி எல்கோசெஸ் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது (இதில் 213.56 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டல பகுதியாகவும் மற்றும் மீதமுள்ள 31.61 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது). இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.45 கோடி ஆகும். இதில் ரூ.14.99 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்டையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் | திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம் – 60 ஏக்கர்<br>திருவாளர்கள் சத்யம் நிறுவனம் –50 ஏக்கர்<br>திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸ் நிறுவனம் –5 ஏக்கர்<br>திருவாளர்கள் காலிபர் பாயிண்ட்– 5 ஏக்கர் |



| | |
|---|---|
| சார்ந்த நிறுவனங்களின் விவரங்கள் | திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் – 2 ஏக்கர் |

## எல்கோசெஸ்– நாவல்பட்டு, திருச்சி

இந்த நாவல்பட்டு, திருச்சி எல்கோசெஸ் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது (இதில் 123.23 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டல பகுதியாகவும் மற்றும் மீதமுள்ள 24.38 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது). இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.60 கோடி ஆகும். இதில் ரூ.33.21 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்டையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் விவரங்கள் | திருவாளர்கள் அசிஸ்ட் இண்டர்நேஷனல் பி.லிட். – 3 ஏக்கர்<br>திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் –2 ஏக்கர்<br>திருவாளர்கள் எச்.சி.எல் இன்போசிஸ்டம்ஸ் நிறுவனம் –2 ஏக்கர்<br>திருவாளர்கள் ஐ.வேவ் சிஸ்டம்ஸ் டெக்னாலிஜிஸ் பி.லிட் – 5 ஏக்கர் |

| | | |
|---|---|---|
| | திருவாளர்கள் அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பி.லிட் – 5 ஏக்கர்<br>திருவாளர்கள் ஜைலாக் சிஸ்டம்ஸ் லிட் – 5 ஏக்கர்<br>திருவாளர்கள் ஐ.லிங்க் மல்டி டெக் சொலுயூஸன்ஸ் பி.லிட் – 2 ஏக்கர்<br>திருவாளர்கள் டபிள்யு என்.எஸ் குளோபல் சர்வீஸஸ் பி.லிட் – 5 ஏக்கர்<br>திருவாளர்கள் வி டி ஆர்ட் டெக்னாலிஜிஸ் – 2 ஏக்கர் | |
| | | **பணியாளர்களின் எண்ணிக்கை** |
| தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு | திருவாளர்கள் ஐ.லிங்க் மல்டி டெக் சொலுயூஸன்ஸ் பி.லிட் – 6,668 சதுர அடி<br>திருவாளர்கள் சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனம் –12,941 சதுர அடி<br>திருவாளர்கள் பைன் டேட்டா சயின்ஸஸ் பிரைவேட் லிமிடெட் – | 80<br><br>220 |



| | | |
|---|---|---|
| ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தின் அளவுகள் | 3643 சதுர அடி<br>(இன்னும் பணி ஆரம்பிக்கப் படவில்லை)<br>திருவாளர்கள் ஊரம் டெக்னாலஜிஸ்–5976 சதுர அடி<br>(இன்னும் பணி ஆரம்பிக்கப் படவில்லை) | |

## எல்கோசெஸ்– கங்கைகொண்டான், திருநெல்வேலி

இந்த கங்கைகொண்டான், திருநெல்வேலி எல்கோசெஸ் 500 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. (இதில் 290 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டல பகுதியாகவும் மற்றும் மீதமுள்ள 210 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது). இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ. 52.85 கோடி ஆகும். இதில் ரூ.29 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் விவரங்கள் | திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் நிறுவனம் – 100 ஏக்கர்<br><br>திருவாளர்கள் டெக்கான் ஐ சர்வீசஸ் நிறுவனம் –2 ஏக்கர்<br><br>திருவாளர்கள் ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் நிறுவனம் –25 ஏக்கர் (சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதிகள்) |
| தமிழ்நாடுமின்னணு நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தின் அளவுகள் | திருவாளர்கள் கோம்சாஸ் மீடியா பிரைவேட் நிறுவனம் –9,338 சதுர அடி |
| ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் தற்போதைய கட்டங்களின் நிலை | திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் நிறுவனம் 2.60 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தை தற்சமயம் கட்டி வருகிறது. |



| | |
|---|---|
| மற்றும் வேலைவாய்ப்பு விவரங்கள் | |

## எல்கோசெஸ்– ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

இந்த ஜாகீர்அம்மாபாளையம், சேலம் எல்கோசெஸ் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. (இதில் முதற்கட்டமாக 53.33 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் மட்டும் பயன்படுத்தப்படவுள்ளது). இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.33 கோடி ஆகும். இதில் ரூ.10 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனம் | திருவாளர்கள் டி.பி. பிரொபஷனல் – 3.00 ஏக்கர்<br><br>திருவாளர்கள் வீ. டெக்னாலிஜிஸ் – 9.49 ஏக்கர்<br><br>திருவாளர்கள் மகிமா டெக்னாலிஜிஸ் பி. லிட்– 3.00 ஏக்கர்<br><br>திருவாளர்கள் ஜி.டி.பி இன்போடெக் சொலுஷன்ஸ் லிமிடெட் – 2.50 ஏக்கர் |

| | |
|---|---|
| | திருவாளர்கள் செனோவேட் இன்போடெக் பிரைவேட் லிமிடெட் –1.25 ஏக்கர் |
| 50,000 சதுர அடி கொண்ட தமிழ்நாடு மின்னணு நிறுவனதின் தகவல்தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டத்தின் தற்போதைய நிலை | கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

## எல்கோசெஸ்– விஸ்வநாதபுரம், ஒசூர்

இந்த விஸ்வநாதபுரம், ஒசூர் எல்கோசெஸ் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ஏறக்குறைய ரூ.40 கோடி ஆகும். இதில் ரூ.39 கோடி அடிப்படை உட்கட்டமைப்பு வசதிக்காக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| குத்தகை அடிப்டையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்ட தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனம் | திருவாளர்கள் ஒகாயா இன்போகாம் – 10 ஏக்கர்<br>திருவாளர்கள் சி.ஆர்.எம். ஐ.டி.சொலுஷன்ஸ் பி. லிட். – 3 ஏக்கர்<br>திருவாளர்கள் சி.ஆர்.எம் இன்போடெக் இந்தியா பி.லிட். – 2 ஏக்கர் |



| | |
|---|---|
| 50,000 சதுர அடி கொண்ட தமிழ்நாடு மின்னணு நிறுவனதின் தகவல்தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டத்தின் தற்போதைய நிலை | கட்டடப் பணிகள் நடைபெற்று வருகிறது. |

## வன்பொருள் கொள்முதல்

அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்யவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை வழங்கவும், விருப்பக் கொள்முதல் முகவராக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை (ELCOT), தமிழக அரசு நியமித்துள்ளது. எல்காட் நிறுவனமானது தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த வன்பொருள்களான சமீபத்திய உள்ளமைப்புடன் (Configuration) கூடிய சேவை கணினிகள் (Servers), மேசைக்கணினிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptop Computers), அச்சுப்பொறிகள் (Printers), ஸ்கேனர்கள் (Scanners), மற்றும் அனைத்து வலையமைப்பு சார்ந்த கருவிகள் (Network Device) ஆகியவற்றை குறைந்தபட்ச விலையில் கொள்முதல் செய்து வருகிறது.

எல்காட் நிறுவனம், அனைத்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்களை முக்கிய அரசுத் துறைகளான வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, வனத்துறை, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறைகளுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இணையநெறிமுறை சார்ந்த கண்காணிப்பு ஒளிப்படக்கருவிகளை (IP Camera Surveillance System) அரசு அலுவலகங்களில் நிறுவுவதற்காக கொள்முதல் செய்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் (Firka Revenue Inspector) மடிக்கணினியை கொள்முதல் செய்து வெற்றிகரமாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 500 அரசு இ–சேவை மையங்களுக்கு தேவையான வன்பொருளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கொள்முதல் செய்து வழங்கியுள்ளது.

## மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மாணவ மாணவிகள் தங்களது கணினித் திறனை



மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தமிழக அரசு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்காக தமிழ் நாடு மின்னணு நிறுவனம் மூலம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்கான ஆணை வெளியிடப்பட்டது.

முதற்கட்டமாக 2011–12 ஆம் ஆண்டு 8,98,866 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக 2012–13ம் ஆண்டிற்கு, 7,56,000 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக 2013–14ம் ஆண்டிற்கு 5,65,000 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

நான்காம் மற்றும் ஐந்தாம் கட்டங்களுக்கு (2014–15 மற்றும் 2015–16) 11 லட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்வதற்கான ஆணையினை அரசு வெளியிட்டுள்ளது. இதன் கொள்முதல் மற்றும் விநியோகத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான்காம் கட்டம் அக்டோபர் 2015லும் ஐந்தாம் கட்டம் டிசம்பர் 2015லும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசு இ–சேவை மையங்கள் (Arasu eSevai Centres)

அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்துவதன் நோக்கம், குடிமக்களுக்கான பலதரப்பட்ட அரசின் சேவைகளை ஒரே இடத்தில் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகாமையில் அளிப்பதாகும். அரசு, தனியார் மற்றும் இதர சேவைகளை குடிமக்களுக்கு அளிக்கும் முகப்புவாயிலாக அரசு இ–சேவை மையங்கள் அமைந்துள்ளன. அரசு, தனியார் மற்றும் இதர நிறுவனங்கள் தங்களது தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சாராத சேவைகளை குடிமக்களுக்கு பயனுக்காக ஒரே இடத்தில் வழங்க வழிவகுப்பதே இதன் நோக்கமாகும்.

தற்போது, அரசு இ–சேவை மையங்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினால் தமிழகம் முழுவதும் கிராம மற்றும் நகர்புறங்களில் 345 இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 101 அரசு இ–சேவை மையங்கள் 15.7.2015 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டன.



| | | |
|---|---|---|
| மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் | – | 32 |
| வட்டாச்சியர் அலுவலகம் (திருவள்ளூர் மற்றும் காஞ்சியுரம் மாவட்டங்கள்) | – | 18 |
| சென்னை மாநகராட்சி (சென்னை பகுதி எல்லைக்குள்) | – | 50 |
| சென்னை குடிநீர் வாரியம் | – | 7 |
| நகராட்சி ஆணையர் அலுவலகங்கள் | – | 102 |
| ஊரகவளர்ச்சி (ம) பஞ்சாயத்துராஜ் | – | 100 |
| மாவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் | – | 36 |
| | – | 345 |

தற்போது அரசு இ–சேவை மூலமாக 4,65,123 சேவை பறிமாற்றங்களும் அதன் மூலம் சுமார் ரூ.3.00 கோடி ஈட்டியுள்ளது.

## மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களுக்கான மேகக் கணினி சார்ந்த சேவைகள் (Cloud and web hosting services to students and Young Entrepreneurs) மற்றும் இணையப் பதிவேற்ற சேவைகள்

மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களின் நலனுக்காக அரசின் மேகக்கணினி சூழல் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இணைய பதிவேற்ற சேவைகள் போன்ற

மேகக் கணினி சார்ந்த சேவைகளை சுயசேவை முறையில் குறைந்த கட்டணத்தில் ரூ.50 இலட்சம் செலவில் உருவாக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- C-DAC நிறுவனத்திற்கு மேகக் கணினிச் சூழலை உருவாக்கிட பணி ஆணை வழங்கப்பட்டது.
- ICTACT மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது.
- C-DAC நிறுவனம், மேகக்கணினி சூழலுக்கான வலைதளத்தை உருவாக்கி உள்ளது. மாணவர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்களை தேர்ந்தெடுப்பதற்கான ஆன்லைன் பதிவுப் படிவம் உருவாக்கப்பட்டுள்ளது. சேவை கட்டணம் நிர்ணயிக்கப்பட உள்ளது.

## கிராமப்புற வணிக வெளிப்பணி மையங்கள் (Business Process Outsourcing (BPO) in rural areas

சமுதாய மற்றும் பொருளாதார வசதிகளில் மிகவும் பின்தங்கியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கி வேலைவாய்ப்பு வழங்கவும் மற்றும் அவர்கள் நகரங்களுக்கு



குடிபெயராமல் இருக்கவும் அரசு மேம்படுத்தப்பட்ட கிராமப்புற வணிக வெளிப்பணிக் கொள்கையை வெளியிட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டபடி 50 பணியாளர் கொண்ட கிராமப் புற வணிக வெளிப்பணி மையம் நாவலூார்– குட்டப்பட்டு கிராமம், ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மையம் எல்காட் நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் ஒத்துழைப்பின்படி திருவாளர் சதர்லேண்ட் குளோபல் சர்விஸஸ் (கிராமப்புற வெளிப்பணி மைய நிறுவனம்) அவர்களால் ஷிவானி தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் (கல்வி நிறுவனம்) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் திருவாளர் அன்னை மகளிர் மேம்பாட்டு முகமைக்கு மூன்று இடங்களில் கிராமப்புற வெளிப்பணி மையம் நிறுவுவதற்காக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## <u>அத்தியாயம் – III</u>

## <u>தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு</u>

தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பானது இலக்கமுறை வலையமைப்பு செயல்படுவதற்கான ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஆகும். இத்தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பில் தரவு மையம், கணினி வலையமைப்பு மற்றும் தரவு தொகுப்பு மேலாண்மை சாதனங்கள் ஆகியவை அடங்கும். இந்தியாவில் முழுமையான மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநில தரவு மையம் அமையப் பெற்ற சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாடு, பின்வரும் தகவல் தொழில் நுட்பவியல் உள்கட்டமைப்புகளை தன்வசம் கொண்டுள்ளது.

**1) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு**

அ) கிடைமட்ட இணைப்பு

ஆ) அகன்ற அலைவரிசை இணைப்பு

இ) பதிலி இணைப்பு

**2) அகண்ட அலைவரிசை இணைப்பு / குத்தகை வாயிலான இணையதள இணைப்பு**

**3) தமிழ்நாடு மாநில தரவு மையம்**

**4) கணினி சர்வர் பண்ணை**

**5) தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு**

**6) பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம்**

**7) மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு**

**8) மின்னஞ்சல் தொகுப்பு**



### 1. தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network -TNSWAN)

மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, தேசிய மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் முக்கிய கட்டமைப்பாக கண்டறியப்பட்டுள்ளது. மத்திய அரசு இத்திட்டத்திற்கான நெறிமுறைகளை வகுத்ததுடன் மாநில அரசுகளுக்கான பகுதி நிதி உதவியையும் வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான முன்மொழிவுக்கு ஏப்ரல் **2005–**ல் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பானது மாநில மற்றும் மத்திய அரசுகளால் ரூ.**140.25** கோடி திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு ரூ.**55.73** கோடி, மாநில பங்களிப்பு ரூ.**84.52** கோடி) ஏற்படுத்தப்பட்ட ஒரு பகிர்வு திட்டம் ஆகும்.

#### 1. அ) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு – செங்குத்த இணைப்பு (TNSWAN - Vertical Connectivity

தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பில் 708 இருப்பு முனைகள், தலைமைச் செயலகம், ராஜ்பவன், தமிழ்நாடு காவல் துறை இயக்குனர்அலுவலகம், சென்னை மாநகர காவல் ஆணையர் அலுவலகம், சென்னை மாநகராட்சி, பள்ளிக்கல்வி இயக்குனரகம், மருத்துவக்கல்வி இயக்குனரகம், எழிலகம்,

பனகல் மாளிகை, குறளகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய்துறை அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் இந்த வலையமைப்பின் வாயிலாக அரசுத் துறைகளுக்கு குரல், தரவு, இணையம் மற்றும் வீடியோ போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வலையமைப்பு மூலம் பாதுகாப்பான இணைப்பு வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசு துறைகள் மாநில தரவு மையத்தில் இடம் பெற்றுள்ள கணினி சர்வர்களை அணுகி மக்களுக்கான சேவைகளை வழங்க ஏதுவாகிறது. இத்தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் BOOT (Build, Own, Operate and Transfer) செயல்பாட்டின் முதற்கட்டமானது 30.11.2012 அன்று நிறைவு பெற்றது. இரண்டாம் கட்டமாக 09.09.2013 முதல் 3 வருடத்திற்கான செயல்பாடு இயங்கிவருகிறது. தமிழ் நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் இரணடாம் கட்ட செயல்பாடுகளுக்காக ரூ.74.69 கோடி ரூபாய் செலவினத்தில் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. 24x7 சேவை ஒப்பந்த அடிப்படையில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.



தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் வாயிலாக அரசு துறைகளுக்கு பின் வரும் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

- பாதுகாப்பான அக இணையசேவைகள் (Intranet)
- பாதுகாப்பான இணைய சேவைகள்
- நெருங்கிய பயனர் குழு குரல் சேவைகள்
- கானோலி காட்சி சேவைகள்

மத்திய அரசின் நெறிமுறைப்படி தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு மற்றும் தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு மாவட்ட தலைமையகங்களில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாவட்ட தலைநகரங்களுக்கான அலைவரிசை இணைப்பு 34 Mbps/ 100 Mbps/ 1 Gbps என்ற அளவில் தேவைக்கேற்ப மேம்படுத்தப்படும்.

## 1. ஆ) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு – கிடைமட்ட இணைப்பு (TNSWAN – Horizontal Connectivity)

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்புக்கு வெளியே அமையப்பெற்றுள்ள அரசுத் துறைகள் தங்களது பயன்பாடுகளை அளிப்பதற்கும், ஒலி, தரவு, இணையம் மற்றும் ஒளி வாயிலான கலந்துரையாடல் வசதிகளுக்கான அக இணைய இணைப்புகளை பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இருப்பு முனைகள் வாயிலாக

கிடைமட்ட இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநில தரவு மையத்தில் ஏற்றம் செய்யப்பட்டுள்ள அரசு துறைகளின் செயல்பாடுகளை அணுக ஏதுவாக உள்ளது.

இதுவரை கிடைமட்ட இணைப்பு வணிக வரித்துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், கருவூலம் மற்றும் கணக்கு துறை, பத்திரப் பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத்துறை, போக்குவரத்து துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மாநில சுகாதாரக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நில அளவைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட 2000 அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 1. இ) பதிலி இணைப்பு (Redundant Connectivity)

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் செங்குத்து இணைப்பானது NKN / BSNL நிறுவனம் வழங்கும் அலைவரிசை வாயிலாக மாவட்டங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது. செங்குத்து இணைப்பினை (vertical connectivity) பலப்படுத்தவும்,



தடையற்ற இணைப்பினை மாவட்டங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கும் பொருட்டும், பதிலி இணைப்பாக 2 Mbps MPLS – VPN (1:1) இணைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 146 பதிலி இணைப்புகள் முடிவு பெற்றுள்ளன. 50 இணைப்புகள் வழங்கும்பணி நடைபெற்று வருகிறது,

### 2. அகன்ற அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity) / இணைய குத்தகை இணைப்பு (Internet leased line)

அகன்ற அலைவரிசையானது அதிவேகமாக மற்றும் கூடுதலாக தரவுகளை பரிமாறிக் கொள்ள கூடுதல் அலைவரிசைகளை வழங்குகிறது. அத்தகைய அகன்ற அலைவரிசைகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மிகவும் குறைந்தபட்ச விலையில் அரசு அலுவலகங்களுக்கு வழங்கி வருகிறது. இதுவரை பள்ளிகள் உட்பட சுமார் 25,000 அரசு அலுவலகங்களுக்கு அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிக அளவிலான மாறும் தரவுகளை கையாளும் அரசு துறைகளுக்கு 2 Mbps முதல் 45 Mbps வேகத்தில் இணைய

குத்தகை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது குடிநீர் வாரியம், சென்னை மாநகராட்சி, ஊரக வளர்ச்சி இயக்குநரகம், தொல்லியல் துறை மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் முதலிய துறைகளுக்கு இணைய குத்தகை இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது

## 3. தமிழ்நாடு மாநில தரவு மையம் (Tamil Nadu State Data Centre- TNSDC)

தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் மின் ஆளுமை திட்டப் பணிகளை செயல்படுத்த முதுகெலும்பாக அமையப்பெற்ற உட்கட்டமைப்புகளுள் தமிழ்நாடு மாநில தரவு மையமும் ஒன்றாகும். இத்திட்டமானது, மாநில மற்றும் மத்திய அரசிற்கு இடையேயான ரூ.60.80 கோடி மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு ரூ.55.80 கோடி, மாநில பங்களிப்பு ரூ.5 கோடி) மத்திய அரசின் விதிமுறைகளின்படி அமையப் பெற்ற ஒரு பகிர்வு திட்டம் ஆகும். நாட்டிலேயே மாநில தரவு மையத்தின் பணிகள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மைக்காக ISO / IEC 20000-1:2011 மற்றும் ISO / IEC 27001:2013 சான்றிதழை பெற்ற முதல் மாநிலம் தமிழகமாகும்.



தமிழ்நாடு மாநில தரவு மையம் எல்காட் பெருங்குடி வளாகத்தில் 24x7 செயல்பாடு உறுதி சேவை தர உடன்பாட்டுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்பான மாநில தரவு மையத்தில் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாடுகளை ஏற்றம் செய்துக் கொள்ள இயலும். தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், 39 அரசு துறைகளின் பயன்பாட்டு தரவுகள் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. ஆவையாவன:–

- தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் HMS மற்றும் HMIS
- மாநில சேவை விநியோக நுழைவாயில் வழியாக மின்னாளுமை மற்றும் மின்மாவட்ட திட்ட பயன்பாடு,
- குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு திட்டம் (Crime & Criminal Tracking Network System-CCTNS)
- பதிவுத்துறையின் கட்டணம் செலுத்துதல்
- சென்னை மாநகராட்சியின் ERP
- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் ஆவண மேலாண்மை திட்டம்

- MGR பல்கலைக்கழகத்தில் கல்லூரி மேலாண்மைத் திட்டம்,
- விலையில்லா மடிக்கணினி மின் விசிறி, மின் அம்மி, மற்றும் மின்அரவை இயந்திரம் வழங்கும் திட்டத்தின் ERP

தற்போது இத்தரவு மையம் தன் முழுமையான அதிகபட்ச இடவசதி மற்றும் உட்கட்டமைப்பு கொள்ளளவில் 100 சதவீதத்தை நிறைவு செய்துள்ளது. மேலும் அரசு துறைகளின் தேவைகளுக்கேற்ப கூடுதல் சர்வர் இடவசதிக்காக BSNL நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ் நாடு மின்னணு நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.

தற்போது அரசுத்துறைகளின் தேவைக்கேற்ப, எல்காட் நிறுவனம் 21 கூடுதல் சர்வர் அடுக்குகளுடன் தமிழ்நாடு மாநில தரவுமையத்தை விரிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## 4. கணினி சர்வர் பண்ணை (Server Farm)

மாநில தரவு மையத்தில் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை ஏற்றம் செய்யும் பொழுது, தரவு எற்ற



நடுநிலைமை, ஆன்டிவைரஸ் (Anti-Virus) மற்றும் ஃபயர்வால் போன்ற பொதுவான வசதிளை அளிப்பதற்காக, ‘கணினி சர்வர் பண்ணை’ ஒன்று வன்பொருள், மென்பொருள், சோதனை சாதனங்களுடன் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை ஏற்றம் செய்வதற்கு முன், அம்மென்பொருளை, பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் மதிப்பீடு சோதனைகளுக்கு உட்படுத்த இது உதவும்.

## 5. தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network - NKN)

தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு மத்திய அரசு மூலம் நிறுவப்பட்ட ஒரு தேசிய அளவிலான அதிவேக வலையமைப்பாகும். தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு, விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள், இந்திய மற்றும் உலகளாவிய கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, மனிதவள மேம்பாட்டிற்காக செயல்படுவதற்கான ஒரு பொது தளத்தினை (common platform) வழங்குகிறது.

இந்த வலையமைப்பிற்கான அலைவரிசை, அரசு நிறுவனங்களான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் ரயில்டெல் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு, தேசிய அளவில் தேசிய மின் ஆளுமை திட்டங்கள் செயல்படுவதற்கான தளமாக அமையப் பெற்று வருகிறது. இந்த வலையமைப்பு, வினாடிக்கு 2.5/10 Gigabits தொடங்கி, படிப்படியாக வினாடிக்கு 40/100 Gigabits வரை அதிவேக இணைப்பு கொடுக்கவல்லது. 1 Gbps வேகத்துடன் கூடிய 100 Mbps இணைய இணைப்பு தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிறுவப்பட்டு, உபயோகத்தில் உள்ளது.

இந்த தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு மூலம் மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநில தரவு மைய பயனாளிகள் தேசிய அளவில் ஏற்றம் செய்யப்பட்டுள்ள பயன்பாடுகளை (applications) அதிவேகமாக அணுக இயலும். இந்த தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network) மூலம் ஏற்கனவே இருந்ததை விட பலமடங்கு அதிகமான வேகத்தில் பயன்பாடுகளை அணுக இயலும்.



## 6. பேரிடர் மீட்பு மையம் மற்றும் அருகாமை பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre and Nearline Disaster Recovery Centre )

தமிழ்நாடு மாநில தரவு மையம், அரசு துறைகள் தங்கள் பயன்பாடுகளை ஒரு பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்து ஒருங்கிணைப்பு மற்றும் வள ஆதாரத்தை நடைமுறைப்படுத்த உதவிகரமாக உள்ளது. எனினும் சுனாமி, பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கை தொடர்பான பேரழிவுகள் மாநில தரவு மையங்களின் பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளது. எனவே அரசுத் துறைகளின் மின்சேவைகள் தடையின்றி தொர்டர்ச்சியாக நடைபெற ஒரு பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre) அமைப்பது அத்தியாவசியமாகிறது. பேரிடர் மீட்பு மையம் அமைக்கும் பணிக்கான செயலாக்க முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கொள்முதல், நிறுவுதல், கட்டமைப்பு, சோதனை, செயல்பாடு மற்றும் மேலாண்மை ஆகியவற்றுக்கான நிறுவனத்தை திறந்த நிலை ஒப்பந்த புள்ளி மூலம் தேர்ந்தெடுக்கும் பணியில் எல்காட் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. தற்போது புனேயில் உள்ள தேசிய தரவு மையம், மாநில தரவு மையத்தின், பேரிடர் மீட்பு மையமாக இயங்கி வருகிறது.

உடனுக்குடன் தரவு பதிவேற்றம் செய்வதற்கான அருகாமை பேரிடர் மீட்பு மையம் அமைப்பதற்காக இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா (STPI) மற்றும் BSNL நிறுவனங்களுடன் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

## 7. மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு (Cloud Computing Set up at TNSDC)

தமிழ்நாடு மாநில தரவு மையம், அரசுத் துறைகளுக்கு தடையற்ற, மிகவும் நம்பகமான / வலுவான பகிர்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட, மேம்படுத்தக்கூடிய உட்கட்டமைப்பினை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. கணினி உட்கட்டமைப்பினை சிறந்த மற்றும் உகந்த முறையில் பயன்படுத்துவதற்கும், ஒரே உட்கட்டமைப்பினை பல்வேறு பயன்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு அத்தியாவசியமாகிறது. மேலும், இந்த மேகக் கணினிய தொழில்நுட்பத்தால் தொழில்நுட்ப வளங்களின் தொகுப்பு (consolidation of IT resources) ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் மின்சக்தி சேமிப்பு எற்படும். இது பசுமை தொழில்நுட்பத்திற்கு வழி வகுக்கும்.



மாநில தரவு மையத்தில் மேக கணினி வாயிலாக சேவை விநியோகம் (service delivery) ஏற்படுத்தப்பட உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளங்களின் சிறப்பான பயன்பாடு, மாற்றக்கூடிய அளவீடு மற்றும் தரவின் பேரிடர் மீட்பு ஆகியவற்றுக்கான தீர்வாக மேகக்கணினியம் அமையும். இந்த மேகக் கணினிய அமைப்பு அரசிற்கு வன்பொருள், மென்பொருள் மற்றும் பராமரிப்புக்கான செலவினங்களை குறைக்க வழிவகுக்கும். அரசுத் துறைகள் தங்கள் சேவைகளை வலைதளம் மூலம் நேரடியாக வழங்க, தரவு மையத்தில் அமையப் பெறும் மேகக் கணினிய அமைப்பு உதவும். இந்த மேகக் கணினிய அமைப்பானது (அ) உள்கட்டமைப்பு சேவை (ஆ) பயன்பாட்டு தள சேவை (இ) மென்பொருள் சேவை ஆகியவற்றை வழங்குவதற்கான ஒரு தீர்வாகும். இதன் தொடக்கமாக, மாநில தரவு மையத்தில் அமையப்பெற்ற உள்கட்டமைப்பு வசதிகளை கொண்டு C-DAC நிறுவனத்தின் மூலம் மேகக் கணினியம் நிறுவப்பட்டுள்ளது. இந்த மேகக் கணினியத்தில் புடவை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்திற்கான தரவு ஏற்றம் செய்யப்பட்டு, அது பொது பயன்பாட்டில் உள்ளது. மேலும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ERP - FMS கருத்து சான்று முறையில் ஏற்றம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தமிழ்நாடு மின்சார ஆய்வகம், அருங்காட்சியக மின்நூல், தமிழ்

நாடு மின்னாளுமை முகமையின் மின் கற்றல் மற்றும் மின் அலுவலக பயன்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

எல்காட் நிறுவனம் மத்திய மற்றும் மாநில அரசு நிதிஉதவியுடன் முழுமையான மேகக்கணியத்தை அமைக்கும் பணியில் உள்ளது.

## 8. மின்னஞ்சல் தொகுப்பு

அரசு துறைகளில் மின்னணு செயல்பாட்டிற்கு மின்னஞ்சல் தொகுப்பு மிகவும் முக்கியமானதாகும். தலைமைச்செயலகத்தின் அலுவலர்கள் மற்றும் துறைகள், மாவட்டவாரியான துறை அலுவலர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கென சுமார் 3100 மின்னஞ்சல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தடையில்லா இணைப்பு, வழங்குவதுடன் சேமிப்புக்கான நெறிமுறைகளுக்குட்பட்டு மின்னஞ்சலை அரசு சார் தகவல் பரிமாற்றத்துக்கு உபயோகப்படுத்தும் வகையில் முழுமையான மின்னஞ்சல் தொகுப்பு உருவாக்கப்படும். முதல்கட்டமாக தேசிய தகவலியல் மையம் மூலம் மின்னஞ்சல் தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



# அத்தியாயம் – IV

# மின்னாளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

## மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்கு பார்வை – தமிழ்நாடு தொலை நோக்கு பார்வை 2023

> **“தமிழ்நாடு, பொறுப்பான மற்றும் வெளிப்படையான ஆளுமையால் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு என்ற போற்றத்தக்க ஒரு கலாச்சாரத்தை எட்டும்.”**

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் அனைத்து மின் ஆளுமை முயற்சிகளையும் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு மின் ஆளுமை திட்டங்கள் பொது மக்களுக்கு நேர்த்தியாகவும், வெளிப்படையாகவும் கிடைக்கப்பெற வேண்டுமென்ற

குறிக்கோளுடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மின் மாவட்டம், கிராம மற்றும் நகர்புறங்களில் பொது சேவை மையங்கள், தகவல் தொழில்நுட்ப தொடர்பு மற்றும் அதை சார்ந்த உபகரணங்களின் (ICT) திறன் மேம்பாடு (Capacity building), புவி சார் தகவல் அமைப்பு (GIS), மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH), மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (SSDG) ஆகிய முக்கியமான திட்டங்களை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வையினை நிறைவு செய்யும் பொருட்டு, தகவல் தொழில் நுட்பம் வாயிலாக பொது மக்களுக்கு அவர் தம் இருப்பிடத்திலேயே சேவைகளை வழங்குவதை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.


மின் ஆளுமை இயக்ககம் (Directorate of e-Governace) மின் ஆளுமை முயற்சிகள் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திட்டங்களை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தவும் மின் ஆளுமை முகமையுடன் இணைந்து



அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கெனவும் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## 2) நிறுவன வடிவமைப்பு

மாநில அளவிலான மின் ஆளுமை நடவடிக்கைக்கான நிறுவன வடிவமைப்பு பின்வருமாறு :




உயர்மட்டக் குழு (தமிழ்நாடு மின் ஆளுமை முகமை)
படம் – 1

## 2.1 மாநில உயர்மட்ட குழு

தேசிய மின்ஆளுமை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மின் ஆளுமை திட்டங்கள் அனைத்தும் தலைமைச் செயலாளரை தலைவராக கொண்டு உருவாக்கப்பட்ட உயர்மட்ட குழுவால் வழிநடத்தப்பட்டு வருகிறது. இக்குழு மாநில மின் ஆளுமை முயற்சிகள் மற்றும் குறிக்கோள் திட்டங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதுடன், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பினை உறுதிசெய்கிறது. மின்ஆளுமை முயற்சிகளின் திட்ட மேலாண்மை மூலமாக தரப்படுத்தல் மற்றும் நிலைத்தன்மையை மாநில மின் ஆளுமைக் குழுவின் உதவியுடன் வழங்கிவருகிறது.

## 2.2 தமிழ்நாடு மின் ஆளுமை முகமை குழு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை 11 குறிக்கோள் துறைகளின் செயலாளர்களை உள்ளடக்கியது. இக்குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மின் ஆளுமை முயற்சிகளுக்கும், குடிமக்களுக்கான சேவை வழங்குவதற்கும் வழிகாட்டுகிறது.




## 2.3 நிறுவன வடிவமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு

தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சார்ந்த திட்டங்கள் பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், வழிகாட்டுதல், தரப்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சூழலை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைப்புத் துறை / முகமையாக செயல்படும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் அவசியமாகிறது.

இதனை பூர்த்தி செய்யும் வகையில், அரசு 2 இணை இயக்குநர்கள் (தொழில்நுட்பம்), 5 முதுநிலை கணினி பகுப்பாய்வாளர்கள் / முதுநிலை கணினி பொறியாளர்கள், 15 கணினி பகுப்பாய்வாளர்கள் / கணினி பொறியாளர்கள், 60 உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் கொண்ட தொழில்நுட்ப பிரிவையும், ஒரு துணை இயக்குநர், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், 2 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர், ஒரு அலுவலக உதவியாளர் கொண்ட நிர்வாக பிரிவும் கொண்ட தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு (IT Cadre) உருவாக்கப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்ப பிரிவிற்கு ஊட்டுப்பதவியாக (feeder category) உதவி கணினி

பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் பணியிடங்கள் அமையும்.

பின்வரும் விளக்கப்படம் மின் ஆளுமை இயக்ககம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் நிறுவன அமைப்பினை விளக்குகிறது :




படம் – 2



## 2.4 மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)

மாநில மின் குறிக்கோள் குழு (State e-Governance Mission Team) ஒன்று தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையில் செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்று மேலாண்மை தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்கள் உள்ளனர். மாநில மின் குறிக்கோள் குழுவின் ஆலோசகர்கள் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் மின் ஆளுமை திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் அரசுத் துறைகளுக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இந்த ஆலோசகர்கள், மாநில அரசுத் துறைகளுக்கு ஒரு ஆலோசனைக் குழுவாக செயல்பட்டு உதவிவருவதுடன், துறை சார்ந்த தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப திட்டமிடலையும் (ICT Road map), விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

## 2.5 மாவட்ட மின் ஆளுமை சங்கம் (DeGS)

அனைத்து மாவட்டங்களிலும் மின்ஆளுமை திட்டங்களை செயல்படுத்திட மின் ஆளுமை சங்கங்களை (District e-Governance Societies) அமைத்திட வேண்டுமென அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி, அனைத்து

மாவட்டங்களிலும் மாவட்ட மின் ஆளுமைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட மின் ஆளுமைச் சங்கமும் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. சென்னையைப் பொறுத்தவரை, இச்சங்கம், சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேவைகளை வழங்கும் துறை சார்ந்த அதிகாரிகள் அனைவரும் இச்சங்கத்தின் உறுப்பினராவர். மாவட்ட அளவில், தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட மின் ஆளுமை சங்கத்தினை சார்ந்ததாகும். மாவட்ட அளவில் செயல்படுத்தப்பட்ட மின் ஆளுமை திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை மேற்கொள்வதில் மாவட்ட மின் ஆளுமைச் சங்கம் முக்கிய பங்கு வகிக்கும்.

மின் ஆளுமை சங்கங்கள் **(DeGS)** நன்முறையில் இயங்கிட ஏதுவாக அரசால் தலா ரூபாய் பத்து லட்சம் வீதம் ஆதார நிதி உதவியாக **(as seed money assistance)** ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது.



## 3. மின் ஆளுமை முகமையின் பல்வேறு திட்டங்கள் (Projects, Programmes and Schemes)

### 3.1. மின் மாவட்டத் திட்டம் (e-District Programme)

மின் மாவட்டத் திட்டம், தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் ஒரு மாநில குறிக்கோள் திட்டமாகும். இத்திட்டத்தின் குறிக்கோள், தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு, மாநில தரவு மையம், மாநில இணையதளம் மற்றும் மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் **(SWAN, SDC, and SSDG)** போன்ற உட்கட்டமைப்புகளைக் கொண்டு, பொதுச் சேவை மையங்கள், வசதி மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் வாயிலாக பொது மக்களுக்கு மின் சேவைகளை வழங்குவதாகும்.

தற்போது, மின் மாவட்டத் திட்டத்தின்படி, பின்வரும் **36** வகையான சேவைகள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு, மாநில தரவு மையம், மாநில இணையதளம் மற்றும் மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் **(SWAN, SDC, and SSDG)** போன்ற உட்கட்டமைப்புகளைக் கொண்டு, வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதல் **11** சேவைகள் அரசு இ–சேவை மையங்கள் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன :

| சேவைகள் விவரம் | அரசுத்துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|---|
| சான்றிதழ்கள் | வருவாய்த் துறை | 1. வருமானச் சான்றிதழ்<br>2. பிறப்பிடச் சான்றிதழ்<br>3. சாதிச் சான்றிதழ்<br>4. குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ்<br>5. கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ் |
| சமூக நலத் திட்டங்கள் | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 6. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டம்<br>7. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்<br>8. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையார் மகள் திருமண உதவித் திட்டம் |



| | | |
|---|---|---|
| | | 9.டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்<br>10. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்<br>11. முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் I & II |
| கல்வி உதவித் தொகை | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 12. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம்.<br>13. பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம்.<br>14. பள்ளி மேற்படிப்பிற்கான மாநில அரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம். |

| | | |
|---|---|---|
| | | 15. மேற்படிப்பிற்கான சிறப்பு கல்வி உதவித் திட்டம். |
| கல்வி உதவித் தொகை | பிற்படுத்தப் பட்டோர், மிக பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 16. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டங்கள்.<br>17. தொழிற் கல்வி மாணவர்களுக்கு நிதியுதவித் திட்டம்.<br>18. பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்.<br>19. பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |
| சமூக பாதுகாப்பு மற்றும் ஓய்வூதிய திட்டம் | வருவாய் | 20. இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதிய திட்டம்.<br>21. இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டம்<br>22. இந்திரா காந்தி தேசிய விதவைகள் ஓய்வூதிய திட்டம்<br>23. ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதிய திட்டம் |



| | | |
|---|---|---|
| | | 24. ஆதரவற்ற விதவை ஓய்வூதிய திட்டம்<br>25. மாற்றுதிறனாளி ஓய்வூதிய திட்டம்<br>26. மணமாகாத பெண்கள் ஓய்வூதிய திட்டம் |
| மற்ற சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் பிற சேவைகள் | வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை, கடவுச் சீட்டு, வருமானவரித்துறையின் நிரந்தர கணக்கு எண் அட்டை (Pan Card) உள்ளிட்ட 10 சேவைகள் | |

முன்னோடி மின் மாவட்டத் திட்டத்தினைச் செயலாக்கம் செய்திடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் முன்னோடி மின் மாவட்டங்களாக முறையே அரியலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், நீலகிரி மற்றும் திருவாரூர் ஆகிய 6 மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் வருவாய்த் துறையின் 5 சேவைகள், சமூக நலத்துறையில் 6 சேவைகள் முழுமையாக செயல் படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த 11 சேவைகளும் தமிழ்நாட்டிலுள்ள இதர 26 மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

மின் மாவட்டத் திட்டத்திற்கான கணினி ஒருங்கிணைப்பவரை தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு துறைகளை சார்ந்த 92 சேவைகள் கண்டறியப்பட்டு, மின் மாவட்டத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளன. இதற்கான மென்பொருள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

## 3.2 அரசு இ–சேவை மையங்கள் (Arasu eSevai Centres)

பொது மக்களுக்கு வழங்கவேண்டிய அடிப்படைத் தேவைகளை நன்குணர்ந்துள்ள அரசு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே அரசு இ–சேவை மையங்கள் வழியாக தேவையான அரசு சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, தற்போது அரசு இ–சேவை மையங்கள், மின் மாவட்ட சேவைகளையும் மற்றும் இதர தனியார் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. கிராமப்புற பொதுசேவை மையங்களின் பயன்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டம் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின்னணு சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு பொதுவான இடத்தில் வழங்கும் நோக்கில் நகர்ப்புற அரசு இ–சேவை மையங்கள் செயல்படும்.



தற்போது, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள், புது வாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராமப்புற வறுமை ஒழிப்பு சங்கங்கள், தமிழ் நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக நிறுவப்பட்ட மையங்கள் இ–சேவைகளை வழங்கி வருகின்றன.

நகர்ப்புற அரசு இ–சேவை மையங்களை அமைப்பதற்கான முன்னோடித் திட்டம் கடந்த 24–02–2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பின்வரும் 14 இடங்களில் துவக்கி வைக்கப்பட்டது :

| | |
|---|---|
| வட்டாட்சியர் அலுவலகங்கள் | – 3 |
| சென்னை மாநகராட்சி (மண்டல அலுவலகங்கள்) | – 3 |
| சென்னைப் பெருநகர குடிநீர்வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB Depots) | – 2 |
| நகர்ப்புற கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்கள் | – 6 |

இதன் இரண்டாவது கட்டமாக மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளில் 678 அரசு இ–சேவை மையங்கள் தமிழ் நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் மாநில முழுவதும் 10,034 அரசு இ–சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 3.3. மாநில சேவை இணையதளம், மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (State Portal, State Services Delivery Gateway)

தமிழ்நாடு அரசின் சேவைகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பெறக்கூடிய ஒரே முகப்பாக மாநில சேவை இணைய தளம் இருக்கிறது. மின்மாவட்ட சேவைகளின் ஒருங்கிணைப்பு, பொருண்மை நிர்வாக அமைப்பு, துறைகளின் சேவைகளுக்கான இணைப்புகள், கைபேசி இணக்கமுறை, பொதுமக்களால் செய்யப்படும் பதிவுகள் ஆகியவற்றை மாநில சேவை இணைய தளம் உள்ளடக்கியிருக்கும்.

இச்சேவை இணைய தளம் வடிவமைக்கப்பட்டு, மாநில தரக்கட்டுப்பாட்டு (STQC) நிறுவனத்தால் அதன் செயல்பாடு, திறன் மற்றும் பாதுகாப்பு குறித்து முழுமையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 24.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தின் 7 சேவைகள் 10.8.2015 முதல் தொடங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.



## 3.4 திறன் மேம்பாடு (Capacity Building)

திறன் மேம்பாட்டுத் திட்டம், அரசின் பல்வேறு நிலைகளில் தகவல் தொழில்நுட்பத் திறனில் நிபுணத்துவம் அடைய, திறமைகளை உயர்த்திட பின்வருவனவற்றை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும் :

1. பல்வேறு மின் ஆளுமை முயற்சிகளில் தரம் மற்றும் சீரான நிலையை ஏற்படுத்துதல்.
2. மாற்று மேலாண்மை மற்றும் பயிற்சிக்கான தேவைகள்.
3. அரசு செயல்பாடுகளின் மறு கட்டமைப்பு
4. செலவினம் மற்றும் மனிதவள மேம்பாட்டினை திறமையுடன் கையாளுதல்.
5. வெளிச் சந்தையிலுள்ள வளத்தினை திறம்படப் பெற்றிடல்.
6. பிற இடங்களில் பயன்படுத்தப்படும் சிறப்பு அம்சங்களை நடைமுறைப்படுத்தல்.

மேற்கண்ட திறன் மேம்பாடு முறைகள் தவிர, பின்வரும் பல்வேறு பாடத் திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால், அரசுத் துறைப் பணியாளர்களின் நலனுக்கென நடத்தப்படுகின்றன :

1. அடிப்படை தகவல் தொழில்நுட்ப புத்தாக்க பயிற்சி
2. மின் மாவட்டம் மென்பொருள் பயிற்சி
3. மின் ஆளுமை புத்தாக்க பயிற்சி

4. மின் ஆளுமைத் திட்ட சிறப்பு நிலைப் பயிற்சி **(STeP)**
5. மென் திறன் பயிற்சி
6. வன்பொருள் மற்றும் வலையமைப்பு பாடத் திட்டம்
7. தரவு தொகுப்பு மேலாண்மை பாடத் திட்டம்
8. ஐ.பி.வி. 6 பயிற்சி
9. மாற்று மேலாண்மை பயிற்சி
10. அரசு சேவை வழங்குதலில் மாற்றம் செய்வதற்கான பயிற்சி
11. திட்ட மேலாண்மை பாடத் திட்டம்
12. மென்பொருள் உருவாக்கும் பயிற்சி

அக்டோபர் 2014ல், NISG ஆல் ஹைதராபாத்தில் STeP eGLCல் நடத்தப்பட்ட தமிழ்நாட்டிலிருந்து 60 அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செப்டம்பர் 2014ல், 6 முக்கிய பகுதிகளில் நடத்தப்பட்ட DSC பயிற்சியில், 381 அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


இதுநாள் வரை 9397 அரசு அலுவலர்களுக்கு மின் மாவட்ட மென்பொருள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை 41556 அரசு அலுவலர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. பின்வரும்



விளக்கப்பட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் கடந்த 2009 முதல் ஜுலை, 2015 வரையில் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களை விளக்குகிறது.

**அளிக்கப்பட்ட பயிற்சிகள்**
**(2009 முதல் ஆகஸ்டு 2015 வரை)**




படம்–3

சென்னையில், மே 2015ல் 32 மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கான ICT வாரமானது, 4 தொகுதிகளாக நடத்தப்பட்டது. இந்த ICT வாரத்தில் மொத்தம் 339 மாணவர்கள் பங்கேற்றனர்.

## 3.5 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

புவிசார் தகவல் அமைப்பினை உபயோகிப்போரின் தேவைகளை கவனத்தில் கொண்டும், வளங்களை வீணாக்காமல், கவனமுடன் வளர்ச்சி சூழ்நிலையை எட்டவும் ஓர் பொதுவான தமிழ் நாடு இடம் சார்ந்த தரவு உட்கட்டமைப்பினை ஏற்படுத்துவதும் இதற்கென தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு கொள்கை ஒன்று உருவாக்குவதும் அவசியமாகும்.

இதற்கென ரூ.132.80 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- துறை பிரதி நிதிகள் உள்ளடக்கிய ஒரு தொழில் நுட்ப குழு அமைக்கப்பட்டுள்ளது.
- மெட்டா தரவு கட்டமைப்பிற்கான வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை தேசிய தகவல் மையம் செய்து வருகிறது.



- இடம்சார்ந்த பின்வரும் தரவுகளை இதன் கடின வடிவமைப்பினை கொண்டு சரிசெய்து கொள்ளலாம்.
  - ✓ பல்வேறு துறைகள்
  - ✓ மாநிலம், மாவட்டம், வட்டம், தாலுாகா, மாநகராட்சிகள் போன்ற முக்கியமான பகுதிகள்
  - ✓ பல்வேறு அளவுகளில் அடுக்குகள் (நிர்வாக எல்லை 50 K, 10 K, 1K)
  - ✓ பல்வேறு துறைகள்/ மாவட்டங்களின் பங்களிப்பு மற்றும் பயனர்கள்
  - ✓ பல்வேறு அடுக்குகளுக்கான பலதரப்பட்ட சலுகைகள் ( அகம்/இடையிலான/பொது)
- மெட்டா தரவு கட்டமைப்பினை கொண்ட இணையதள புவிசார் தகவல் சேவை.

இத்திட்டத்திற்காக இதுவரை 8 துறைகள் / நிறுவனங்கள் தங்களது அடுக்குகளை பகிர்ந்து உள்ளன.

- ➢ தேசிய தகவல் மையம் இதற்கான தரத்துடன் கூடிய ஒரு தீர்வினை உருவாக்கி வருகிறது

- அடுக்குகளை இனம் கண்டு பிரித்து அரசு மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கான அங்கீகாரத்தை நிலை நிறுத்துதல்
- மைய அரசின் சர்வே துறையிடமிருந்து பெறப்பட்ட அடிப்படை அடுக்குகளை பிற துறைகளின் அளவீடுகளுக்கு ஏற்ப மாற்றி அமைத்தல் மற்றும் தேவைகளை கண்டறிந்து ஒருங்கிணைத்தல்
- பல துறைகளும் உபயோகிக்கும் வகையில் புவிசார் தகவல் அமைப்பிற்கான கட்டமைப்பினை உருவாக்குதல்
- பயன்படுத்துவோர் எண்ணிக்கையை மனதில் வைத்து, தரம் சார்ந்த இணைய வசதி கொண்ட புவிசார் தகவல் அமைப்பினை நிறுவி பல்வேறு தரவு தொகுதிகளுக்கான இணைப்பினை உருவாக்குதல்

## 3.6 மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (STATE RESIDENT DATA HUB)

மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையமானது ஆதார் எண்களை கொண்ட குடிமக்களின் தரவு தொகுப்பு ஆகும். இத்தகவல் தொகுப்பு மையத்தின் தரவுதளத்தினை



பொது மக்களுக்கு சேவை அளிக்கும் அனைத்து துறைகளும் பயன்படுத்த இயலும். அரசின் திட்டங்களுக்கான இலக்குகளை நிர்ணயிக்கவும் சிறப்பான முறையில் சேவை அளிக்கவும் மேம்படுத்தப்பட்ட பொறுப்பு தன்மை கொள்ளவும் சிறப்பான முறையில் திட்டங்களை கண்காணிக்கவும் அரசுக்கு இத்திட்டம் உதவிபுரியும். இத்திட்டத்திற்கான உத்தேச மதிப்பு **30.25** கோடி.

மாநில குடியிருப்போர் தகவல் மையம், மாநில அரசுக்கு பின்வரும் வகையில் உதவிபுரியும் :

- மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து, மையப்படுத்தப்பட்ட, பாதுகாப்பான முறையில் நிர்வகித்தல்;
- ஆதார் எண்ணைப் பயன்படுத்தி, மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட பயனாளிகளை தனித்தனியாக கண்டறிதல்;
- அரசுத்துறைகளின் தரவுத்தளங்களை ஆதார் எண் சார்ந்த தேசிய மக்கள் தொகை பதிவேட்டினை நிகழ்நேரத்தில் ஒருங்கிணைத்தல்;
- பல்வேறு பயன்பாடுகளில் ஆதார் சான்றளிப்பினை இணைத்தல்;

இத்திட்டத்திற்கான ஆலோசனை முகமையும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான திட்ட ஒருங்கிணைப்பாளரும் கண்டறியப்பட்டுள்ளனர்.

## 3.7 மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல்

கடந்த சில ஆண்டுகளாக அரசுத் துறைகள் மின்ஆளுமைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. குடிமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு 14 அரசுத் துறைகளின் சேவைகளை முதன்மைப்படுத்தி, மாநில மின் குறிக்கோள் துறைகளாக தமிழக அரசு தெரிவு செய்துள்ளது. இத்துறைகளுக்கு தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் பொது சேவை மையங்கள் ஆகிய கட்டமைப்பு வசதிகளை அளித்து, அவற்றின் மூலமாக மின்னணு வழி சேவைகளை வழங்க தகவல் தொழில்நுட்பவியல் துறை உறுதுணையாக உள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆகிய நிறுவனங்கள் இந்த மின்னாளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மின்குறிக்கோள் துறைகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதலையும், திட்ட செயல்பாட்டிற்கான உதவியையும் வழங்கி வருகின்றன.



# அத்தியாயம் – V

# 2014–2015 ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்

## 1. அரசுத் துறைகளுக்கான “மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது”

அரசுத் துறைகளில் மின் ஆளுமையின் உபயோகத்தினை உரிய வகையில் அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் **“மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது”** ஆண்டுதோறும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

2015–16 ஆம் ஆண்டிற்கான பரிந்துரைகள் அரசு துறைகள் மற்றும் மாவட்டங்களிடமிருந்து 3 பிரிவுகளின் கீழ் கோரப்பட்டுள்ளன.

## மாணவர்களுக்கான மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது

மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களின் மின் ஆளுமை விழிப்புணர்வை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மாணவர்களுக்கான மின்

ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருதினை அறிவித்துள்ளது.

அரசாணையில் குறிப்பிடப்பட்ட தொகுதிகளின் கீழ் 2015–16 ஆண்டிற்கான பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

## சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழ் நாடு அரசின் மின்னாளுமை விருது.

சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான தமிழ் நாடு அரசின் மின்னாளுமை விருது அறிவிக்கப்பட்டுள்ளது. சமூக தேவைகளுக்கேற்ப மின்னாளுமை தீர்வுகள் மற்றும் செயல்பாடுகளை கண்டறிந்து அவற்றை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

அரசாணையில் குறிப்பிடப்பட்ட தொகுதிகளின் கீழ் 2015–16 ஆண்டிற்கான பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

## 2. தகவல் தொழில் நுட்ப பாதுகாப்பு தணிக்கை

அரசு இணையதளங்களையும், தகவல் தொழில்நுட்ப மென்பொருள்களையும் சீர்கேடு மற்றும் ஊடுருவலில் இருந்து பாதுகாக்க, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தகவல்தொழில்



நுட்ப தணிக்கைகான முகமைகளை எல்காட் நிறுவனம் தேர்ந்தெடுத்து அவற்றின் மூலமாக பாதுகாப்பு தணிக்கையை மேற்கொண்டுவருகிறது. தகவல் தொழில் நுட்ப பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.1,76,41,000/–நிதியில் மொத்தமாக 93 இணையதளங்கள் தணிக்கை செய்யப்படவுள்ளன.

## 3. இணையதள சேவை விளக்கக் கோப்பகம்

இணையதள சேவை விளக்கக் கோப்பகம் ஒன்று அதாவது “Online Demonstrative Services Directory” தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவைகள் (Online e-Services), இணையதள முகவரிகள் (Website Addresses), சேவை தொடர்பான இணைப்புகள் (Links to the Services), உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி (Demonstrative User Guide) போன்ற விவரங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென இடம்பெறும். இதனை செயல்படுத்திட ஏதுவாக ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டு பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது. பாதுகாப்பு தணிக்கை முடிவடைந்து, மேகக் கணினியத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 4. திட்டக் கண்காணிப்பு மென்பொருள்

அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினை காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள், அதாவது **Scheme Monitoring Application Software** உருவாக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த மென்பொருள், துறைகளின் திட்டங்களை நிகழ் நேர ஆய்வு செய்து கண்காணிக்கவும் உரிய முடிவுகளை எடுக்கவும் உதவி செய்கிறது.

இதற்கு தேவையான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் பாதுகாப்பு தணிக்கையும் நிறைவு பெற்றுள்ளன. தற்பொழுது இந்த மென்பொருள் சோதனைக்காக மேகக் கணினி சூழலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 5. அரசு அலுவலர்களுக்கான மின்–கற்றல் பாடங்கள்

மாநிலத்தில் மின்னாளுமை செயல்பாட்டை விரைவு படுத்துவதற்காகவும் அரசு அலுவலர்களின் தகவல் தொழில் நுட்ப திறனை மேம்படுத்தும் நோக்கிலும் மின் கற்றல் செயல்பாட்டை உருவாக்குவதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் பாதுகாப்பு தணிக்கையும் நிறைவு பெற்றுள்ளன. தற்பொழுது இந்த மென்பொருள் சோதனைக்காக மேகக் கணினி சூழலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.



## 6. மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதி

அரசுத் துறைகளின் பல்வேறு சேவைகளை மின் ஆளுமை வழியாக வழங்க மின் ஆளுமை திட்டத்தின் கீழ் 14 துறைகள் தேர்வு செய்யப்பட்டு, கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படாத அரசு துறைகளின் சேவைகளை மின் ஆளுமை மூலமாக செயல்படுத்த, மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதியாக(e-Governance Initiative Fund) ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7. குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி

மாநிலத்தில் கைபேசியின் பயன்பாடு அதிகமாக உள்ள நிலையில், மின் மாவட்ட சேவை மூலமாக பெறப்படும் விண்ணப்பங்கள் எந்த நிலையில் உள்ளது என்ற விபரம் குறுந்தகவலாக மக்களுக்கு கைபேசி மூலம் சென்றடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு ரூ.1,20,50,000/– மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்

பட்டுள்ளது. இதன் பயன்பாட்டு உருவாக்கம் நடைபெற்று வருகிறது.

## 8. திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம்

தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் திறன் மேம்பாட்டிற்கான தேவைகளை பூர்த்தி செய்திட, ‘‘திறன் மேம்பாட்டு சிறப்பு மையம்’’ ஒன்றினை அமைத்திட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. மின் ஆளுமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசு துறைகளில் குடிமக்களுக்கான மின்னணு தேவைகளை அளித்திட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலில் மனிதவள திறன் மேம்பாடு மற்றும் தேவைகளை இம்மையம் பூர்த்தி செய்கிறது. அரசு துறை ஊழியர்களின் திறன் மேம்பாட்டினை தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலில் அதிகரித்திட, உரிய வசதிகளை உருவாக்கிட ஏதுவாக இம்மையம் செயல்படும். திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையத்தினை உருவாக்கிட ரூ.131.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்மையத்தை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் வளாகத்தில் உருவாக்கிட பணி நடைபெற்று வருகின்றது. இம்மையத்திற்கான மேகக்கணினி சூழலை உருவாக்கிட



தேவையான மனிதவளத்தினை வழங்கிடுமாறு C-DAC நிறுவனம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் ஆண்டு செயல்பாட்டிற்காக ரூ.94.15இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 7 நிறுவனங்கள், இதில் பங்குபெற விருப்பம் தெரிவித்துள்ளன.

<u>அத்தியாயம் –VI</u>

## 2014–2015ஆம் ஆண்டின் சாதனைகள்

### 1) மாண்புமிகு முதலமைச்சரின் சிறந்த நடைமுறைக்கான விருது – 2015

அரசு இ–சேவை மையங்கள் வழியாக குடிமக்களுக்கு சேவைகள் வழங்கப்படுவதை அங்கீகரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல் ஆளுமைக்கான சிறந்த நடைமுறை விருது சுதந்திர தின விழா 2015ன் போது வழங்கப்பட்டது.

### 2. eTaal

குறிக்கோள் திட்டங்கள் உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அளவிலான திட்டங்களின் மின்னணு பரிமாற்ற புள்ளி விவரங்களின் பரவலுக்கான ஒரு இணைய சேவை தளமே **eTaal** எனப்படும். கிட்டத்தட்ட நிகழ்நேர அடிப்படையில் அவ்வப்போது இணைய வாயிலான செயல்பாடுகளின் பரிமாற்றம் குறித்த புள்ளிவிவரங்களை **eTaal** பெறுகிறது. மேற்படி புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் / திட்டங்கள் ஆகியவை தேசிய அளவில் தரவரிசைப் படுத்தப்படுகின்றன. பல்வேறு அரசு துறைகளின்



ஒருங்கிணைப்புடனும், தமிழ்நாடு மின்னாளுமை முகமை எடுத்த தொடர் முயற்சிகளின் பயனாகவும், மாநில அரசு திட்டங்களைப் பொறுத்தவரையில், மொத்த மின்னணு பரிமாற்றங்களில், முதல் மூன்று இடங்களில் உள்ளது.

### 3. மின்மாவட்டங்கள்

பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மின்மாவட்ட திட்டத்தின் கீழ் 92 சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுவரை, 27 சேவைகள், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

வருவாய் மற்றும் சமூகநலத் துறையின் கீழ் வழங்கப்பட்ட மின் மாவட்ட சேவைகளின் விவரம் பின்வருமாறு :

| வருடம் | பரிமாற்ற விவரங்கள் | ஒட்டுமொத்த பரிமாற்ற எண்ணிக்கை |
|---|---|---|
| 2011–12 | 83,046 | 83,046 |
| 2012–13 | 1,98,353 | 2,81,399 |
| 2013–14 | 9,85,353 | 12,66,752 |
| 2014–15 | 24,75,890 | 37,42,642 |
| ஏப்ரல் – ஜூலை 2015 | 37,74,488 | 75,17,130 |

## 4. “வெப் ரத்னா” விருது–2014

2014–ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் **“வெப் ரத்னா”** விருது இணையதளத்தில் மக்களுக்குப் பயன்படும் தகவல்கள் மற்றும் சிறப்பான மின்ஆளுமை சேவைகளுக்காக தமிழ்நாடு அரசின் இணையதளத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இணைய அடிப்படையிலான முன்முயற்சிகள், சிறந்த இணைய சேவை வழங்கும் துறைகளின் தரம் மற்றும் குடிமக்களின் இணைய வாயிலான கேள்விகளுக்கு பதிலளிக்கும் பொறுப்புணர்ச்சி நிலை ஆகியவற்றை தேர்வு தகுதிகளாக இவ்விருது கொண்டுள்ளது. மேலும், அணுகுமுறை மற்றும் பயன்பாட்டு அம்சங்களும் கருத்தில் கொள்ளப்படுகிறது. மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையினால் இவ்விருது வழங்கப்படுகிறது.



**அத்தியாயம் –VII**

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து வெளிவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும், அதன் மூலம் அவர்களை தொழில்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனம், தகவல் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம், பொது மற்றும் தனியார் கூட்டுமுயற்சியில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன்மூலம் மாணவர்களை தொழில்துறைக்கான தகுதி பெறச்செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

2014–15 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், பின்வரும் முயற்சிகளை செயல்படுத்தியுள்ளது.

- மொத்தம் 98 உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை தமிழகத்தில் நடத்தி அதன் மூலம் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2566 உயர்கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

- பள்ளி கல்வி ஆசிரியர்களுக்கான 80 திறன் வளர்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு அதன் மூலம் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் 2538 பள்ளி கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.



- அரசு தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 30,000 மாணவர்களுக்கான தொழில் முனைவு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 5 பன்னாட்டு ஆய்வு இதழ்களில், 147 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

- தொழில்துறை கல்வி நிறுவன கலந்துரையாடலுக்கான 7 மாநாடுகள் (ICTACT Bridge) 6 நகரங்களில் நடத்தப்பட்டன. மேலும் 34 தொழில்நுட்ப மாநாடுகள் (ICTACT Power Seminars) தமிழக மாணவர்களுக்காக நடத்தப்பெற்றன.

- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், தமிழக அரசின் 5 திட்டங்களை 2014–15ஆம் ஆண்டில் வெற்றிகரமாக செயல்படுத்தி முடித்துள்ளது.

## ICTACT கூட்டாண்மை ஒப்பந்தங்கள்

* ICTACT புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் (RGNIYD) Entrepreneurship Development மற்றும் Career Guidance திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தியுள்ளது.

* VMware நிறுவனம் தனது VMware IT Academy Programs, ஆன்லைன் லேப், காணொளி வகுப்புகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றை வழங்குவதற்காக ICTACT யுடன் கூட்டாண்மை ஒப்பந்தம் செய்துள்ளது. குறிப்பாக கணினி அறிவியல், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் மாணவர்களுக்கும், VMware ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாணவர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கும் முறையே வழங்கவுள்ளது. மேலும் ICTACT VMwareன் மண்டல IT Academyயாகச் செயல்படுவதோடு தேசிய அளவில் 100 கல்லூரிகளில் VMware IT Academy களை துவக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது.



* ICTACT மற்றும் K7 Computing நிறுவனம் இணைந்து தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் சைபர் செக்யூரிட்டி சார்ந்த 12 Power Seminars நடத்துவதோடு ICT Awareness Week என்னும் திட்டத்தை தமிழகத்தின் முக்கிய நகரங்களான சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்த கூட்டாண்மை ஒப்பந்தமிட்டுள்ளது.

* Autodesk ICTACT யுடன் செய்துகொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் Autodesk நிறுவனம் Autodesk Software Suites, கல்வித் தரவுகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் உலக அங்கீகாரமுள்ள சான்றிதழ் படிப்புகள் ஆகியவற்றை தமிழகத்திலுள்ள ICTACT உறுப்பினர் கல்லூரிகளுக்கு வழங்கவுள்ளது.

* Hortonworks ICTACT யுடன் செய்துகொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தன் நிறுவனத்தின் கல்வித் தரவுகளை பயன்படுத்திக் கொள்ளவும், விருப்ப பட்டயத் தேர்வுகளையும் வழங்கவுள்ளது.

* EMC Academic Alliance ICTACT யுடன் செய்துகொண்டுள்ள கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 50 Academic Excellence மையங்களை தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளது. இம்மையங்கள் தமிழகம் நெடுகிலும் ICTACT தேர்ந்தெடுக்கும் முன்னணி IT நிறுவனங்களில் நிறுவப்படும். இம்மையங்கள் மூலம் Cloud, Data Science, Analytics, IT Infrastructure மற்றும் இதர முன்னணி தொழில்நுட்பங்களை மாணவர்கள் பயின்று கொள்ள வகை செய்யும். மேலும் இம்மையங்களுக்கு தேவையான வல்லுநர் உதவிகள் மற்றும் புத்தகங்களை வழங்கவுள்ளன.

## 2014–15ல் முடிவு பெற்ற அரசுத் திட்டங்கள்

பயிற்சி அளிக்கும் திறனை ஒருங்கே பெற்ற இந்நிறுவனம், அரசுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் மின்னாளுமையில் பயிற்சி அளித்து, அரசுக்கு தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது. இந்நிறுவனம், அரசுத் துறையின் பல்வேறு திட்டங்களிலும் பங்கெடுத்து வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு:



| வ.எண். | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1. | ஐ.டி.ஐ. மாணவர்களுக்கான அடிப்படை கணினிப் பயிற்சி | தமிழ்நாடு அரசு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இயக்குநரகம். |
| 2. | சமூக நலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 100 பெண்களுக்கு பயிற்சி | தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை |
| 3. | அடிப்படை கணினித் திட்டத்தின்கீழ் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குதல் | மத்திய அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம். |
| 4. | 100 மாணவர்களுக்கு மென்திறன் / தகவல் தொழில்நுட்பத் திற திறன் பயிற்சி தொழில்நுட்பத் திறன் பயிற்சி | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம், சென்னை. |
| 5. | மனித வளம் கண்டறியும் திட்டம் | தமிழ்நாடு அரசு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இயக்குநரகம். |

## 2. ICTACT சர்வதேச ஆராய்ச்சி இதழ்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் காலாண்டுகளுக்கு ஒரு முறை, அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, ஐசிடிஏசிடி தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT), ICTACT மென் கணினி ஆய்விதழ் (IJSC) ICTACT ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP) ICTACT நுண்மின்னணுவியல் ஆய்விதழ் (IJME) மற்றும் ICTACT மேலாண்மை ஆய்வுசார் ஆய்விதழ் (IJMS) ஆகிய ஆய்விதழ்களை வெளியிட்டு வருகிறது.

### ICTACT யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான இண்டெக்ஸ் காப்பர்நிக்கஸ் மதிப்பு

- ICTACT தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT)– **6.15**
- ICTACT மென் கணினி ஆய்விதழ் (IJSC) – 6.**35**
- ICTACT ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP) -6.23

### ICTACT யின் சர்வதேச ஆய்விதழ்களுக்கான குளோபல் இம்ப்பேக்ட் பேக்டர் மதிப்பு

- ICTACT தகவல் தொழில்நுட்ப ஆய்விதர் (IJCT) – 0.679
- ICTACT மென் கணினி ஆய்விதழ் (IJSC) – 0.612



- ICTACT ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP) – **0.651**

மேற்குறிப்பிட்டுள்ள ஆய்விதழ்களின் தரத்தை தக்க வைக்க ICTACT உலகலாவிய கல்வித்துறை நிபுணர்கள் மற்றும் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

ICTACT ஆய்விதழ்கள் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரவுத் தொகுப்புகளான டைரக்டரி ஆப் ஓபன் ஆக்சஸ் ஜர்னல்ஸ் (DOAJ), இண்டெக்ஸ் காப்பர்நிக்கஸ், இன்ஸ்பெக் (IET), EBSCO, கூகுள் ஸ்காலர், ஜே–கேட், சைட்பேக்டர், ரிசர்ச் பைபிள் ஆகியவற்றிள் இடம்பெற்றுள்ளது.

## 3. மாநாடுகள், குழுக்கள் மற்றும் கருத்தரங்குகள்

**2014–2015**ம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் **6** ICTACT BRIDGE மாநாடுகளை தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் நடத்தியுள்ளது. **2014–2015**ஆம் கல்வியாண்டில், இந்நிறுவனத்தின் சார்பில் மாணவர்களுக்கான **34** திறன்மிகு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

## 4. தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2015–16 ஆம் ஆண்டிற்கான புது முயற்சிகள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் 2015–16 ஆண்டிற்கான பின்வரும் புதிய திட்டங்களை வகுத்துள்ளது:–

### 4.1. 2015–16–க்கான புதிய அரசு திட்டங்கள்

1) ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் (RGNIYD) மற்றும் ICTACT இணைந்து “ தேசிய அளவில் இளைஞர்களுக்கான தொழில் முனைவு மேம்பாடு” என்னும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தேசிய அளவில் பட்டம் பயிலும் மாணவர்களின் தொழில் முனைவு திறன்களை அறிந்து அதை ஊக்குவிக்கும் முகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நாட்டின் 12 மாநிலங்களில், ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 கல்லூரிகளிலிருந்து 25 NSS அதிகாரிகளை பயிற்றுவித்து அவர்கள் மூலம் அந்தந்த கல்லூரிகளில் தலா 40 மாணவர்கள் பயன்பெறும் விதத்தில் செயல்படுத்தப்படுகிறது. இதன் விளைவாக நாடு தழுவிய அளவில் மொத்தம் 12,000 மாணவர்கள் பயன்பெறுவர்.



2) ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் (RGNIYD) என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகும். ராஜீவ் காந்தி தேசிய இளைஞர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் ICTACT இணைந்து மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் பள்ளி கல்விக்கு பிறகு உள்ள தொழில்சார் வாய்ப்புகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் முறைப்படுத்தப்பட்ட தொழில் வழிகாட்டி நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. இத்திட்டம் தேசிய அளவில் 10 மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

3) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 2,000 வேலையில்லா இளைஞர்களுக்கு, வங்கி மற்றும் நிதி மேலாண்மை (BFSI) துறையில் பணிபெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவுள்ளது.

4) இந்நிறுவனம், தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் தமிழகம் முழுவதும், 44 ஐடிஐ–களில் பயிற்சியாளர்களை நியமித்து மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்திறன் பயிற்சியளிக்கவுள்ளது.

5) தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், 5 சமூக நல விடுதிகளிலுள்ள 100 மாணவிகளுக்கு தகவல் தொழில் நுட்பத்திறன் மற்றும் மென்திறன் மேம்பாட்டு பயிற்சிகளை சமூக நல இயக்குநரகம் மூலம் அளிக்கவுள்ளது.

6) தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், 93 மாணவர்களுக்கு மின் திறன், மற்றும் தகவல் தொழில்நுட்ப திறன், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம் மூலமாக பயிற்றுவிக்கிறது.

7) தமிழ்நாடு தொழில் முனைவு மேம்பாட்டு நிறுவனம் பட்டம் பயிலும் 20,000 மாணவர்களுக்கு தொழில் முனைவு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தொழில் முனைவு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் தொழில் முனைவு திறனுள்ள மாணவர்களைக் கண்டறியும் நோக்கத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது.

## 4.2 பள்ளிகளுக்கான திட்டங்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்



கீழ் K-12 துறை ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சி பட்டறைகளை நடத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இந்நிறுவனம், பள்ளிகளின் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், சேவைகள், நிகழ்ச்சிகள், பயிற்சி அரங்குகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் போட்டிகள் போன்றவைகளை மாணவர்களின் நலனுக்காக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடத்தவுள்ளது.

## 4.3. ICTACT யூத் (ICTACT Youth)

தொழில் நிறுவனங்களில் மாணவர்களின் வேலை பெறக்கூடிய திறனை மேம்படுத்தும் வகையில், இந்நிறுவனம் ICTACT யூத் என்னும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் தொழில் துறையில் இடைவெளியிருப்பதாக கண்டறியப்பட்ட தகவல் தொடர்புத்திறன் மற்றும் தலைமை பண்புத் திறன் ஆகியவற்றை மாணவர்களிடையே உருவாக்கும் வகையில் அமையும்.

ICTACT யூத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம், ICTACT யூத் டாக் மற்றும் ICTACT யூத் பிரசன்ட் என்னும் மாணவர்களுக்கான இரண்டு போட்டிகளை துவக்கியுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். இதன் மூலம்

மாணவர்களின் பேச்சுத் திறன், திட்டங்களை சமர்ப்பிக்கும் திறன் மற்றும் தலைமை பண்பு திறன் ஆகியவை மேம்படும்.

இந்நிறுவனம், ICTACT யூத் ஸம்மிட் என்னும் இளைஞர்களுக்கான குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கான வருடாந்திர உச்சி மாநாட்டை (annual summit) நடத்தவுள்ளது.

இந்நிறுவனம், தமிழக கல்லூரிகளில் ICTACT யூத் சர்க்கிள் என்னும் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுக் குழுக்களை அமைக்கவுள்ளது. இதன் மூலம் எளிதான முறையில் மாணவர்கள் தங்கள் பேச்சுத் திறன், தகவல் தொடர்பு திறன் போன்ற பல திறன்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். இக்குழுவின் நோக்கம், மாணவர்கள் தங்களது பேச்சு, கேட்பு மற்றும் சிந்தனைத் திறன் ஆகியவற்றை எளிதான, இணக்கமான மற்றும் உதவிகரமான சூழ்நிலையில் மேம்படுத்திக்கொள்ள உதவுவதேயாகும். இதன் உறுப்பினர்கள் தங்களது தகவல் தொடர்புத் திறனையும், தலைமைப் பண்புகளையும் மேம்படுத்தி, தன்னம்பிக்கையையும் சுயமுன்னேற்றத்தையும் வளர்த்துக் கொள்ள இக்குழு உதவுகிறது.

## 4.4. ICTACT வேர்ல்ட்

“ICTACT வேர்ல்ட்” என்பது உலக அளவிலுள்ள கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பங்கேற்று கணிப்பியல்,



சமிக்ஞை செயலாக்கவியல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்புகள் சார்ந்த புத்தாக்க ஆய்வுகளின் விளைவுகள் பற்றி விவாதிக்க ICTACT ஏற்படுத்தியிருக்கும் ஒரு தளமாகும்.

International Conference on Signal, Computing and Communication Systems 2016 என்ற தலைப்பில் நடக்கவிருக்கும் ICTACT வேர்ல்ட் மாநாட்டின் முதல் பதிப்பு சென்னையில் பிப்ரவரி **4–6, 2016** வரை நடைபெறவுள்ளது.

ICSCCS 2016 உலக அளவில் சமீபத்திய ஆய்வுகள் மற்றும் ஆய்வுசார் வளர்ச்சி பற்றிய புரிதலையும் ஏற்படுத்தும். மேலும் இம்மாநாடு இந்தியா **2020** என்னும் இலக்கை நோக்கிய ஒரு முக்கிய நகரமாகவும் அமையும்.

“ICTACT வேர்ல்ட்”டின் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவை ICSCCS 2016க்கு நெறிப்படுத்தி வழிகாட்டும் முகமாக உலக அளவில் உள்ள தேர்ந்த கல்வியாளர்கள் மற்றும் பல்துறை வல்லுநர்களை உள்ளடக்கி செயல்படுகிறது.

## 4.5. ICTACT டிஜிட்டல் இந்தியா உறுதிமொழி 2015

ICTACT டிஜிட்டல் இந்தியா உறுதிமொழி **2015** என்பது நம் தேசத்தின் நோக்கமான **2020**–க்குள் வீட்டிற்கு ஒரு டிஜிட்டல் கல்வி அறிவுடைய நபரை உருவாக்கும் திட்டத்திற்கு

வலுசேர்ப்பதாகும். இத்திட்டத்தில் 255 கல்வி நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

அடுத்த 4 ஆண்டுகளில் 5 மில்லியன் மக்களை டிஜிட்டல் கல்வியறிவுடையவர்களாக ஆக்குவதே இந்திய அரசின் நோக்கமாகும். ICTACT டிஜிட்டல் இந்தியா உறுதிமொழி 2015 என்பது ICTACT யின் டிஜிட்டல் கல்வி அறிவு மிஷன் என்னும் திட்டத்தின் கீழ் வரும் உபதிட்டம் ஆகும். இத்திட்டம், மாறிவரும் காலசூழலில் அன்றாட பரிவர்த்தனைகளை மேற்கொள்ளத் தேவையான டிஜிட்டல் கல்வி அறிவை மக்கள் பெருக்கிக்கொள்ள வகை செய்வதாகும். இவ்வுறுதிமொழி கல்வி நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் இணைந்து 2015ஆம் ஆண்டிற்குள் 25,000 நபர்களிடம் டிஜிட்டல் கல்வி அறிவு திறன்களை மேம்படுத்தும் கூட்டு முயற்சியாகும்.



# அத்தியாயம் – VIII

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## 1. அறிமுகம்

உலகு தழுவி வாழும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், மற்றையோருக்கும் இணையம் வழி தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாட்டு வளங்களை வழங்குவதும், வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதும் நோக்கமாகக் கொண்டு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் (த.இ.ப.) ஒரு கூட்டுறவு சங்கமாகத் தமிழக அரசால் 2000, மே 18–ஆம் நாள், ஏற்படுத்தப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக்கழகம் எனப் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## 2. நோக்கம்

உலகு தழுவிய நிலையில் வாழும் தமிழ் மக்களும் தமிழில் ஈடுபாடு கொண்டுள்ள பிற மொழியினரும் தமிழ் மொழியையும், அறிவியல், தொழில் நுட்பம், கணினித் தமிழ் மற்றும் தமிழ்ப் பயன்பாட்டு மென்பொருள்களைக் கற்கவும், தமிழர் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவை பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக

ஏற்படுத்துவதும், அரசு, கல்வி, ஊடகம், வணிகம் போன்ற பல்துறைகளுக்கும் வேண்டிய கணினித் தேவைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து, நிறுவி, பராமரித்து, பயிற்சியளித்துப் பயன்பாட்டைப் பெருக்குதலும் இணையவழி அளிப்பதும் இதன் நோக்கமாகும்.

## 3. குறிக்கோள்

- கணினித் தமிழுக்கான தீர்வுகளை உருவாக்குதல்.
- உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும், தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.
- பார் தழுவி வாழும் தமிழர்கட்கு, அவர்கள் தேவைக்கேற்பப் பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல்: அவர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்பு கொண்டு வாழத் துணைபுரிதல்.
- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்விசார் வளங்களைத் தொகுத்து, அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.



- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத் திட்டங்களை வகுத்தல்.
- கேள்வியறிவுக்காகவோ அல்லது சான்றிதழ், பட்டயம், பட்டம் பெறுவதற்காகவோ கற்போருக்கு இப்பாடங்களைக் கற்க வாய்ப்பளித்தல்: உரிய நியமங்களை நிறைவு செய்தோருக்கு, அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கு ஏற்பத் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ்/பட்டயம்/பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

## 4. செயல்பாடுகள்

### கல்வித்திட்டங்கள்

- அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை கல்வித்திட்டங்களை வகுத்து வழங்குதல்

### கணினித்தமிழ்

- தமிழ் மென்பொருள் உருவாக்கத் தேவையான தரவுகளை உருவாக்க அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

### மின்னூலகம்

- மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் பயன்படும் வகையில் ஒரு மின்னூலகம் உருவாக்குதல்.

### தமிழ் மென்பொருள் உருவாக்கல்

- தமிழக அரசு வழங்கிய நிதியின் மூலம் தமிழில் மென்பொருள்களை உருவாக்குதல் மற்றும் மற்றையோர் உருவாக்கும் மென்பொருள்களைச் சோதித்துச் சான்றளித்தல்.

### தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும், காப்பதும்

- தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளைத் தகவல் பரவலாக்கத்திற்கும், அறிவு பகிர்வுக்கும் ஆவணப்படுத்தித் தளப்படுத்துதல்.

## 5. கல்வித் திட்டங்கள்

- தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளநிலைத் தமிழியல் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது. மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டம் அறிமுக நிலைப் பாடம், அடிப்படை நிலை (1–2 ஆம் வகுப்பு), இடைநிலை ( 3–4 ஆம் வகுப்பு), மேல்நிலை (5–6 ஆம் வகுப்பு) நிலை–1 (7–8 ஆம் வகுப்பு) நிலை–2 (9–10ஆம் வகுப்பு) நிலை–3



(11–12ஆம் வகுப்பு), பட்டயம், மேற்பட்டயம், பட்டம் (இளநிலைத் தமிழியல்)

- 72 நாடுகளைச் சேர்ந்த 15213 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 4579 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிலும், 123 மாணவர்கள் மேற்சான்றிதழ் படிப்பிலும், 381 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 214 மாணவர்கள் மேற்பட்டயத்திலும் மற்றும் 161 மாணவர்கள் பட்டத் தேர்விலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர். உலகெங்கிலும் உள்ள 19 நாடுகளில் உள்ள 77 ஒருங்கிணைப்பு மையங்கள் மூலம் இக்கல்வித்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

- தமிழ் இணையக் கல்விக்கழகம் மாணவர்களின் நலனுக்காகவும் மற்றையோரின் நலனுக்காகவும் மழலை, அடிப்படைநிலை, இடைநிலை, மேல்நிலை, தமிழ் கற்க, தமிழ் கற்போம், திருக்குறள், கலைச்சொல் பேரகராதி ஆகிய குறுவட்டுகளை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

- இணைய வகுப்பறையில் தமிழ் கற்போம் என்னும் தலைப்பில் முனைவர் மா.நன்னன் அவர்கள் தமிழ் வழியாகத் தமிழ் கற்பிக்கிறார். பேரா. தி.ப. சித்தலிங்கையா

அவர்கள் தமிழ் கற்க (Learn Tamil) என்னும் தலைப்பில் ஆங்கிலம் வழியாகத் தமிழ் கற்பிக்கிறார். திரு. சாமிகண்ணு கில்பர்ட் அவர்கள் பிரெஞ்சு வழியாகத் தமிழ் கற்பிக்கிறார். இந்த விரிவுரைகள் எல்லாம் தமிழ் இணையக் கல்விக்கழக இணைய தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்விரிவுரைகள் குறுவட்டுகளாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

## 6. கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **22.09.2014** அன்று தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் கணித் தமிழ் ஆய்வுக்கூடம், படத்தளம், கலையரங்கம் மற்றும் தமிழ் மென்பொருள் உருவாக்க மையம் ஆகியன திறந்து வைக்கப்பட்டன அதன் விவரம் பின்வருமாறு:

- **2012–13** ஆண்டுக்கான பகுதி **2** திட்டத்தின் கீழ் உரூ **20.00** இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு **1085** சதுர அடியில், கணிப்பொறி மற்றும் இணைய வசதியுடன், முற்றிலும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட **24** பணிக்கூடங்களுடன் (Modular Work Station) ஏற்படுத்தப்பட்டுள்ளது.



- தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையப் பாடத்திட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் மற்றும் இணைய வகுப்பறை பாடங்களை ஒளிப்பதிவு செய்வதற்காகப் படத்தளம் ஒன்று **2,274** சதுர அடியில் முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் ஒலி, ஒளி அமைப்பு கட்டுப்பாட்டு அறையுடன் அமைக்கப்பட்டுள்ளது.

- கல்வித் திட்டங்கள் தொடர்பான கூட்டங்கள் நடத்தவும், மாதாந்திர தொடர்ச்சொற்பொழிவுகளை நடத்தவும், மேலும் தமிழ்க்கல்வி சார்ந்த பல நிகழ்ச்சிகளை நடத்தவும் ஏதுவாக ஒரு கலையரங்கம் **2,274** சதுர அடியில் **150** பேர் அமரக் கூடிய வகையில் முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. படத்தளம் மற்றும் கலையரங்கத்திற்கான உள்கட்டமைப்பு பணிகளுக்கு **2011–2012** ஆண்டு பகுதி–**2** திட்டத்தின் கீழ் ரூ.**17.00** இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- **2013–14**ஆம் ஆண்டு பகுதி–**2** திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.**45.00** இலட்சம் நிதியுதவி கொண்டு தமிழ் மென்பொருள் உருவாக்க மையம் ஒன்றைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் நிறுவியுள்ளது. இந்த மையம்

1682 சதுர அடியில், ஒரு நூலகம், ஒரு சேவையக அறை மற்றும் இணைய வசதியுடன் கூடிய நவீன கணிப்பொறிகளுடன் 64 சதுர அடி கொண்ட 13 அறைகள் முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

## 7. தகவலாற்றுப்படை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக சட்டமன்ற பேரவையில் விதி.110இன் கீழ் 11.08.2014 அன்று "உலகெங்கும் உள்ள தமிழ் அறிஞர்கள், வல்லுநர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒருங்கிணைந்து இணைய வழி பங்காற்றித் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தமிழர், தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தின் சாதனைகளை உள்ளடக்கிய தமிழ் மொழி, கலை, மற்றும் பண்பாட்டுக்கான விரிவான இணையவழி களஞ்சியம் ஒன்று தமிழ் இணையக் கல்விக்கழகத்தினால் உருவாக்கப்படும் என்றும் முதற்கட்டமாக இதற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்படும்" என அறிவித்தார்கள். இதன் தொடர்ச்சியாக அரசாணை (நிலை) எண்.4, தகவல் தொழில் நுட்பவியல் துறை, நாள்.20.02.2015 ல் முதற்கட்ட பணிகளுக்கு ரூ.20 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசால் ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தினைச்



செயல்படுத்துவதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் 59 ஆவது குழுமக்கூட்டத்தில் முடிவு செய்தபடி ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் அறிவுரைப்படி தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 8. மின்நிகண்டு, மின்கற்றல் மற்றும் மின்னூலகம்

2014–15ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறையின் மானியக் கோரிக்கையின் பொழுது மாண்புமிகு அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்கள் தமிழ் மின் நிகண்டு, மின் கற்றலுக்கான இணைய தளம், மின்னூலகம் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கப்படும் என அறிவித்தார்கள். அதன் விவரம் பின்வருமாறு:

### 8.1 தமிழ் மின் நிகண்டு:

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மின் நிகண்டு என்ற ஒன்றை உருவாக்கி வருகின்றது. இம்மின் நிகண்டின் தரவினைக் கணினி மொழிபெயர்ப்பிற்கு பயன்படும் வகையில் உருவாக்கி வருகிறது. இது அகராதியிலிருந்து சற்று வேறுபட்டதாகும். இதுவரை தமிழ் மின் நிகண்டில் ஏறத்தாழ 1000த்திற்கும் மேற்பட்ட தலைச்சொற்கள் இடப்பட்டுள்ளன.

## 8.2 மின்கற்றலுக்கான இணையதளம்:

"மின்கற்றலுக்கான இணையதளம்" (e-Learning Portal) ரூ.12.26 இலட்சம் செலவில் அமைக்கப்படும் எனவும், மாணவர்கள் எளிதாக தமிழைக் கற்க இந்த இணைய தளம் உதவும் என்றும் மாண்புமிகு அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்கள் அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக அரசாணை (நிலை) எண்–15, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள்.03.09.2014ல் முதற்கட்டமாக ரூ.12.26 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகம் மின் கற்றலுக்கான இணையத்தை வடிவமைத்து வருகிறது. இதன் முதற்கட்டமாக மாணவர்கள் தங்களின் விவரங்களைத் தேடிப்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்தக் கட்டமாக ஒவ்வொரு பாடத்திலுள்ள கருத்துகளையும், பொருளையும் ஒலி ஒளி மூலம் விளக்கப்படவுள்ளது.

## 8.3 நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் மின்னுருவாக்கம்:

நாட்டுடைமையாக்கப்பட்ட 2211 நூல்கள் தேடுதல் வசதியுடன் கூடிய மின்னுருவாக்கம் (Digitization) செய்யும் பணிகள் ரூ.10 இலட்சம் செலவில் தமிழ் இணையக்



கல்விக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்கள் அறிவித்தார்கள். அதன் தொடர்ச்சியாக முதற்கட்டமாக அரசாணை (நிலை) எண்–5, தகவல் தொழில் நுட்பவியல் துறை நாள்.20.02.2015ல் நாட்டுடைமையாக்கப்பட்ட 178 நூல்களை மின்னுருவாக்கம் செய்ய முதற்கட்டமாக ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இந்த பணிகள் தொடங்கப்பட்டு இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

# 9. தமிழ் இணையக் கல்விக்கழகம் பகுதி – II இன் திட்டப்பணிகள்

## 9.1 தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக் குறிப்புடன் கூடிய தேடுதல்

தமிழ் இணையக் கல்விக்கழகம் மொழியியல் அடிப்படையிலான இலக்கணக் குறிப்புடன் கூடிய விரிதரவு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அரசு ஆணை 2(D) எண் 19, தகவல் தொழில்நுட்பவியல் துறை நாள் 18.11.2011–இல் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக தமிழ் இணையக் கல்விக்கழகம் மின் நூலகத்தில் உள்ள சங்ககால நூல்கள், சங்கம் மருவிய கால நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், மற்றும் சிற்றிலக்கியங்களை உள்ளடக்கி 56 நூல்களில் உள்ள சொற்களுக்கு இலக்கணக்

குறிப்புகள் இடும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பான மென்பொருள் ஒன்றையும் த.இ.க. வடிவமைத்துள்ளது. இதில் 7 வகையான தேடுதல் வசதிகள் இடம்பெற்றுள்ளன. இவ்விரிதரவில் 36 வகையான இலக்கணக் குறிப்புகள் மொழியியல் அடிப்படையில் இடப்பட்டு வருகின்றன. இவ்விரிதரவு, கணினி மொழிபெயர்ப்பிற்கு நிரல்கள் எழுதுவதற்கு ஏற்றாற்போல் உருவாக்கப்பட்டு வருகிறது.

## 9.2 வாய்மொழித் தரவு

தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினித் தமிழ் பயன்பாட்டிற்காக வாய்மொழித் தரவு என்ற ஒரு தரவினை உருவாக்கி வருகிறது. அரசு ஆணை 2(D) எண் 20 (தகவல் தொழில்நுட்பவியல் துறை) நாள் 18.11.2011–இல் ரூ.10.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகத்திலுள்ள மின் விரிவுரைகளில் உள்ள சொற்களை எடுத்து, கணினிக்குப் பயிற்சியளித்து வருகிறது. இதற்காக Dragon & Sphinx 3 போன்ற மென்பொருள்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் 1. Acoustic Models, 2. Language Model files, 3.Word Dictionary, 4. Filler Dictionary போன்ற தரவுகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.



## 9.3 உச்சரிப்புடன் கூடிய தமிழ் மின் அகராதி

தமிழ் இணையக் கல்விக்கழகம் உச்சரிப்புடன் கூடிய தமிழ் மின் அகராதி ஒன்றைத் தயாரித்து வருகிறது. அரசு ஆணை 2(D) எண் 5 (தகவல் தொழில்நுட்பவியல் துறை) நாள் 18.06.2012–இல் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வகராதியில் ஒரு சொல்லைத் தட்டச்சு செய்தும் பொருள் தேடலாம் அல்லது ஒரு சொல்லை உச்சரித்தாலே அச்சொல்லுக்குரிய பொருள் கணினியில் தோன்றும் வகையில் அமைக்கப்படவுள்ளது. இந்த மின் அகராதி பொருள், அடுக்குநிலை மற்றும் சொல் அகராதி என மூன்று பெரும் பிரிவினைக் கொண்டுள்ளது. இம்மின் அகராதிக்காகத் தலைச்சொல், ஒலியியல் வரிவடிவம், ஒலியனியல் வரிவடிவம், தமிழ் பொருள் போன்ற 9 வகையான விளக்கங்களுடன் கூடிய ஒரு மென்பொருளும் உருவாக்கப்பட்டது. அகராதி வரலாற்றில் முதன்முதலாக ஒலியியல் வரிவடிவம் இடம்பெறும் மின் அகராதி இதுவேயாகும். இதுவரையில் ஏறத்தாழ 3000 தலைச்சொற்கள் இடப்பட்டுள்ளன. நூற்றுக்கும் மேலான சொற்களுக்கு உச்சரிப்பும் அளிக்கப்பட்டுள்ளது.

## 10 தொடரியல் மற்றும் பொருண்மையியல் விளக்கத்துடன் கூடிய தமிழ் விரிதரவு

தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினி மொழிபெயர்ப்பிற்காகத் தொடர்கள் மற்றும் பொருண்மைகளைக் கண்டறிய வேண்டி முதன்முதலாக எம்மொழியிலும் இல்லாத தொடரியல், பொருண்மையியல் விளக்கத்துடன் கூடிய விரிதரவு ஒன்றினை உருவாக்கி வருகிறது. அரசு ஆணை 2(D) எண் 6, தகவல் தொழில்நுட்பவியல் துறை, நாள் 11.06.2012–இல் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதலில் தொடரியலுக்காக 22 இலக்கியங்களில் எழுவாய், பயனிலை, பெயர், தொடர்கள், எச்சத் தொடர்கள் போன்ற 15 வகையான இலக்கணத் தொடர்களையும், பொருண்மையியலுக்காக குறிபொருள், உணர்பொருள் போன்ற 7 வகையான இலக்கண விளக்கங்களையும் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பான ஒரு மென்பொருளையும் உருவாக்கியுள்ளது.

## 10. தமிழ் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்தலும், காப்பதும்

மாண்புமிகு அமைச்சர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்கள் தமிழக சட்டமன்ற பேரவையில் தமிழ் பாரம்பரியம், கலை மற்றும் பண்பாடு பற்றிய தொடர் சொற்பொழிவு தமிழ் இணையக்



கல்விக்கழகத்தால் மாதந்தோறும் நடத்தப்படும் எனவும், இதில் சிறந்த அறிஞர்கள் மற்றும் வல்லுநர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள் எனவும், இவை பதிவு செய்யப்பட்டு, உலகெங்கும் வாழும் தமிழர்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில் இணையத்தில் ஒளிபரப்பாக (Webcast) ஆவணப்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்கள். தமிழர்களின் சிற்பக்கலை, தமிழ், தமிழர் நாகரிகத்தின் பழமை குறித்துத் தலைசிறந்த அறிஞர்கள் ஒவ்வொரு மாதமும் சொற்பொழிவாற்றி வருகிறார்கள்.

## 11. கணித்தமிழ் கலந்துரையாடல்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தனது வளாகத்தில் கணித்தமிழ் வளர்ச்சிக்கான செயல்திட்டங்களை உருவாக்கும் நோக்கோடு கடந்த 2015 ஆகஸ்டு 8,9 தேதிகளில் கணித்தமிழ் வளர்ச்சிக்கு என ஒரு கலந்துரையாடலை நடத்தியது. இக்கலந்துரையாடலில் தமிழகத்தைத் தவிர ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து 300 க்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் கலந்துக்கொண்டுத் தங்களது கருத்துகளை அளித்தார்கள். மேலும் உலகின் பல பகுதியிலிருந்தும் இணைய வழியில் பங்கேற்று அவர்களின் கருத்துகளையும் இக்கலந்துரையாடலின் போது அளித்தார்கள்.

இக்கலந்துரையாடல் நான்கு பெரும்பிரிவாக பிரிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

அவையாவன :

1. எண்மியமாக்கம்
2. கணிணி மொழியியல் மற்றும் மொழித் தொழில்நுட்பம்
3. பொதுவள ஊடகப் பரப்புரை
4. கற்றல் மற்றும் கற்பித்தல்

இக்கலந்துரையாடல் அமர்வுகளின் ஒருங்கிணைப்பாளர்கள் தமிழ் இணையக் கல்விக்கழகம் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து தத்தம் பரிந்துரைகளை அளித்துள்ளார்கள். அதன் அடிப்படையில் தமிழ் இணையக் கல்விக்கழகம் தனது எதிர்காலத் திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்த உள்ளது.

## 12. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் புதிய செயல்திட்டங்கள்

- தமிழகம் மட்டுமின்றி உலகெங்கம் கணித்தமிழ் வளர்ச்சியைப் பெருக்கிடவும், ஆராய்ச்சியாளர்கள், அரசு அலுவலர்கள் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய ஒரு உகந்த சூழலை உருவாக்கிடும் நோக்கோடு தமிழ்நாடு அரசு புதிய கணித்தமிழ் கொள்கை



ஒன்றை வெளியிடும். அக்கொள்கையினைச் செம்மையாக வடிவமைத்திட மூத்த தமிழறிஞர்கள், மொழியியல் வல்லுநர்கள், கணித்தமிழ் ஆர்வலர்கள் மற்றும் மென்பொருள் நிறுவனப் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு உயர்மட்டக்குழு அமைக்கப்படும்.

- கணித்தமிழ் வளர்ச்சியைப் பெருக்கிடும் நீண்டகால நோக்கிலும், அதன் முக்கியத்துவத்தை எதிர்காலத் தலைமுறையினர் உணர்ந்து செயல்படும் விதத்திலும், கணித்தமிழ்ப் பேரவைகள் கல்லூரிகள் தோறும் உருவாக்கப்படும். அவற்றிக்கு ஊக்கமளித்திடத் தேவையான ஆதார நிதியினைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் வழங்கிடும்.

- தற்போது நடைமுறைப்படுத்தப்படும் **‘தகவலாற்றுப்படை’** திட்டத்தின் கீழ், நாட்டுடைமையாக்கப்பட்ட மற்றும் அரிய தமிழ்நூல்கள், பழமையான ஆவணங்கள், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், ஓவியங்கள் உட்பட தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் அனைத்துப் படைப்புகளையும் மின்னுருவாக்கம் செய்திடும் ஓர் மாபெரும் திட்டம் செயல்படுத்தப்படும். அதற்குரிய தரக்கட்டுப்பாடுகள் மற்றும் வழிமுறைகளை உலகத்தரத்தினை ஒட்டி வகுத்திடவும், தகுந்த தொழில்நுட்ப

ஆலோசனைகளைப் பெறவும் தமிழகம் மற்றும் வெளிநாடுகளில் இயங்கும் புகழ்பெற்ற அமைப்புகளின் உதவியோடு இத்திட்டம் செயல்படுத்தப்படும். அரிய தமிழ்நூல்கள், பழமையான ஆவணங்கள் ஆகியவற்றைச் சேகரித்து வைத்திருக்கும் தனியார் மற்றும் அரசு சாரா அமைப்புகளையும் இணைத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

- தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ் 99 விசைப்பலகை மற்றும் யூனிகோடு, தமிழ் அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு (TACE16) ஆகியவற்றின் பயன்பாட்டை அரசு அலுவலகங்களிலும் பொதுவெளியிலும் பரவலாக்குவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

- அரசுத் துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்களின் இணையதளங்களில் தமிழ்ப் பயன்பாட்டை முழுமையாகக் கொண்டு வரவும், அவற்றில் யூனிகோடு/ தமிழ் அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு (TACE16) பின்பற்றிட தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

- தமிழ் மொழித் தொழில்நுட்பம் மற்றும் இயற்கை மொழி ஆய்வு நோக்கில் நீண்ட கால ஆராய்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் சொல்லாளர், பிழைதிருத்தி, ஒளி வழி எழுத்தறிவான் ஆகிய மென்பொருட்களைச் செம்மையாக்குவது மட்டுமின்றி, உரை உணர்தல், உரைச்சுருக்கம் தருதல், மனிதன்–கணினி உரையாடல், தானியங்கு மொழிபெயர்ப்பு போன்ற புதிய பலவகைப் பயன்பாட்டு மென்பொருட்கள் உருவாக்கப்படும்.



- தமிழ் மொழியியல் ஆராய்ச்சிக்குப் பெருமளவில் உதவிடத் தேவையான தரவகம் மற்றும் மின்–அகராதி ஆகியவற்றை உருவாக்கிட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- கணினி, அலைபேசி மற்றும் திறன்பேசி உட்பட அனைத்து மின்னணு தகவல் தொடர்புச் சாதனைகளிலும் தமிழைப் பயன்படுத்துவதற்குத் தேவையான மென்பொருட்கள் உருவாக்கப்படும்.

- மென்பொருள் நிறுவனங்களின் தமிழ்மென்பொருள் உருவாக்கங்களுக்குப் பயன்படும் தமிழ் நிரலாக்கங்கள் உருவாக்கப்படும்.

- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான நவீன மொழியாக்கக் கருவிகள் உருவாக்கப்படும்.

- வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தொடர்ந்துப் பயன்பெறும் வகையில் தமிழை இரண்டாம் மொழியாக மற்றும் அந்நிய மொழியாகக் கற்பிக்கும் வகையிலும் அந்தந்த நாட்டுக்கு ஏற்ற சூழலுக்குப் பொருந்தும் வகையிலும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் பாடத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும்.

- வெளிநாடுகளில் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்திடும் தன்னார்வலர்களுக்கு முறையான ஆசிரியர் பயிற்சி இல்லாததைக் கருத்தில் கொண்டு வெளிநாடு வாழ் தமிழாசிரியர்களுக்கான பட்டயப் படிப்பு ஒன்று புதிதாய் அறிமுகம் செய்யப்படும்.

- மொழித்திறன்களை மதிப்பீடு செய்யும் வகையில் உலகத்தரத்தில் மதிப்பீட்டுக் கருவிகளை உருவாக்கிடவும், கணினி வழிக்கற்றல் மற்றும் கற்பித்தலை உள்ளடக்கிய பல்ஊடகப் பயன்பாட்டின் வழி ஒரு முழுமையான கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான மேலாண்மைத் தளம் ஒன்று உருவாக்கப்படும்.

- மாணவர்களை எளிதில் கவர்ந்திடும் வகையில் தமிழ்மொழிப் பாடங்கள், இலக்கணம், அகராதி ஆகியவற்றை பல்ஊடகப் பயன்பாட்டின் துணைகொண்டு அலைபேசி மற்றும்



திறன்பேசியில் பயன்படுத்தும் வகையில் குறுஞ்செயலிகளாகப் படைத்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- பழம்பெரும் அரிய நூல்கள் மற்றும் உலகத் தமிழருக்குப் பயன்தரும் பல செய்திகளை உள்ளடக்கியவாறு தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளம் மெருகூட்டப்படும். மேலும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பாக மாதமொருமுறை செய்திமடல் ஒன்றும் காலாண்டு பன்னாட்டு ஆய்விதழ் ஒன்றும் வெளியிடப்படும்.

- இணையத்தில் தமிழ்மொழியின் பயன்பாட்டை அதிகரித்திடும் நோக்கோடு தமிழ் இணையக் கல்விக்கழகம், ‘விக்கிபீடியா’ உள்ளிட்ட தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து தமிழகமெங்கும் பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வுப் பரப்புரை நிகழ்த்துதல், மாணவர்களுக்கிடையே கணித்தமிழ்த் திறனை ஊக்குவித்திடப் பல்வேறு போட்டிகளை நடத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- தமிழ் இணைய கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்ட மற்றும் அதன் மூலம் வெளியிடப்பட்ட படைப்பாக்கம், கல்வி மற்றும்

அறிவியல் உள்ளடக்கங்கள், பல்வேறு மென்பொருட்கள் மற்றும் அவற்றின் வழிமுறைகள் அனைவருக்கும் தடையின்றிச் சென்று சேரும் விதமாக, அவையனைத்தும் படைப்பாக்க பொதும உரிமங்களின் கீழ் வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



## அத்தியாயம் – IX

## தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்

### 1. முன்னுரை

அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 04.10.2007அன்று துவங்கப்பட்டது. இதன் நோக்கம் குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டி.வி. சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதே ஆகும். இதற்கென, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூார் ஆகிய நான்கு இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டன. ஆயினும், பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் செயலிழந்த நிலையில் இருந்தது.

இந்த அரசு, மே 2011–ல் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டு, புத்துயிரூட்டப்பட்டு “தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்” என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.08.2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தனது கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு, கேபிள்

ஆபரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/—ஐ கேபிள் ஆபரேட்டர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 02.09.2011 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையை தமிழகம் முழுவதற்கும் (சென்னை தவிர) துவக்கி வைத்தார்கள்.

## 2. நோக்கம்

பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் தரமான கேபிள் டிவி சேவையை வழங்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டது.

## 3. பின்னணிச்சூழல் மற்றும் வளர்ச்சி

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது சேவையினை தொடங்குவதற்கு முன்னர், தமிழ்நாட்டில் ஒரு சில பன்முக கேபிள் ஆபரேட்டர்கள், அமைப்பு சாரா முறையில், கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவு சந்தா கட்டணங்களை வசூலித்து வந்தனர். அப்பொழுது, பொதுமக்கள் கேபிள் டிவி சேவையை பெற, உள்ளூர் கேபிள் டிவி



ஆபரேட்டர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ.250 வரை கேபிள் டிவி கட்டணமாக செலுத்தி வந்தனர். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டதால் தரமான கேபிள் டிவி சேவையினை ரூ.70/— என்ற மிகக் குறைந்த மாத கட்டணத்தில் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு வழங்க ஏதுவாக அமைந்தது. தற்போது, இந்நிறுவனம் இலவச சேனல்கள், கட்டண சேனல்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல்கள் உள்ளிட்ட 90 முதல் 100 சேனல்கள் வரை வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவை, பொதுமக்கள் மற்றும் கேபிள் ஆபரேட்டர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசால் உருவாக்கப்பட்ட நலத்திட்ட நடவடிக்கையாகும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் சேவையானது, உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களிடமும், பொது மக்களிடமும் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதிக அளவிலான கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிறுவனத்தின்பால் ஈர்க்கப்பட்டு, அதன் சிக்னல்களை பயன்படுத்தி வருகின்றனர். 02.09.2011 அன்று 4.94 இலட்சங்கள் என இருந்த இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை, 01.08.2015 அன்று 26,246 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள்

வாயிலாக 70.52 இலட்சமாக உயர்ந்ததன் மூலம் இது நிரூபணமாகிறது.

## 4. உட்கட்டமைப்பு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 27 மாவட்ட தலைநகரங்களில் விருப்பமுள்ள பன்முக கேபிள் ஆபரேட்டர்களிடமிருந்து கட்டுப்பாட்டு அறைகளை குத்தகைக்கு எடுத்ததுடன், ஏற்கனவே நான்கு மாவட்டங்களில் இருந்த இந்நிறுவனத்தின் டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகளையும் புனரமைத்தது. இவ்வாறாக தற்பொழுது, இந்நிறுவனத்தின் கீழ் பன்முக கேபிள் ஆபரேட்டர்களிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகளுடன் சேர்த்து மொத்தம் 83 கட்டுப்பாட்டு அறைகள் இயங்கி வருகின்றன. இந்த 83 கட்டுப்பாட்டு அறைகள் வாயிலாக 26,246 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு கேபிள் சேவை தொடர்பினை மாநிலம் முழுவதும் இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

## 5. நிறுவனத்தின் அமைப்பு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், ஒரு தலைவர் மற்றும் ஒரு மேலாண்மை இயக்குநர் ஆகியோரால் தலைமை வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதுமான இந்நிறுவனத்தின்



இயக்கம் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் உள்ள இரண்டு பொது மேலாளர்கள் மற்றும் துணை ஆட்சியர் பதவி நிலையிலுள்ள நான்கு மேலாளர்கள், வட்டாட்சியர் பதவி நிலையிலான இரண்டு துணை மேலாளர்களினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் 54 உதவி பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டாட்சியர் பதவி நிலையிலான ஒரு துணை மேலாளரின் கீழ் ஒரு களப்பணி உதவியாளர் (வருவாய்) , ஒரு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் 3 உதவி தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவு இரண்டு முதன்மை தொழில்நுட்ப அலுவலர்களாலும், ஒரு உதவி தொழில் நுட்ப அலுவலராலும் நிர்வகிக்கப்படுகிறது. கணக்குப் பிரிவு ஒரு நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலராலும் தலைமை வகிக்கப்படுகிறது.

## 6. சென்னை மாநகரத்தில் கேபிள் டி.வி. சேவை துவக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவைகளை சென்னை மாநகரப் பகுதிகளில் 20.10.2012 அன்று துவக்கி

வைத்தார்கள். தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை மாநகரப்பகுதிகளின் அனலாக் மற்றும் டிஜிட்டல் சிக்னல்களை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு வழங்கி வருகிறது.

## 7. டிஜிட்டல்மயமாக்கம்

அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் **02.04.2008** நாளிட்ட குறிப்பு எண்.**9/32/2007–BP&L**–ன்படி, கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditional Access System - CAS) பகுதிகளுக்கான பன்முக கேபிள் ஆபரேட்டர் (MSO) உரிமம் வழங்கியுள்ளது. கேபிள் டிவி நெட்வொர்க் திருத்தச் சட்டம் **2011**–ன்படி நாடு முழுவதும் **31.12.2016**க்குள் கேபிள் டிவி சேவையானது டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். இதில் முதற்கட்டமாக, **31.10.2012**–க்குள் சென்னை உள்ளிட்ட நான்கு பெருநகரங்களின் கேபிள் சேவை டிஜிட்டல் மயமாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல்மயமாக்கலுக்கு தேவையான, சென்னை DAS பகுதிகளுக்கான, பன்முக கேபிள் ஆபரேட்டர் (MSO) உரிமம் வழங்கக் கோரி **05.07.2012** அன்றும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு உரிமம் வழங்கக் கோரி **23.11.2012** அன்றும் மத்திய



தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்து, அவ்விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

## 8. சென்னை மாநகருக்கான DAS உரிமம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சென்னை DAS பகுதிகளுக்கான எம்.எஸ்.ஓ (MSO) உரிமம் கோரும் விண்ணப்பம் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் நிலுவையில் உள்ளது. இது குறித்து மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகம், இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (Telecom Regulatory Authority of India-TRAI) அமைப்பின் கவனத்திற்கு கொண்டு சென்றது. இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் பரிந்துரை குறித்து முடிவெடுப்பதற்காக, அமைச்சகங்களின் கூட்டுக்குழுவினை **03.01.2013** அன்று மத்திய அரசு ஏற்படுத்தியது. இக்கூட்டுக்குழு தன்னுடைய அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **16.12.2012** அன்று அப்போதைய பாரதப் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS பகுதிகளுக்கான DAS உரிமம் (licence)

வழங்கிட தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறு கோரியிருந்தார்கள். மேலும் வழக்கு எண்.11649/2012 ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, 06.12.2012 அன்று வழங்கிய இடைக்காலத் தீர்ப்பில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS பகுதிகளுக்கான உரிமம் வழங்கும் நடைமுறைகள் தொடரலாம் எனவும், உரிமம் வழங்கலாம் எனவும், ஆனால், உரிமம் வழங்குதல் என்பது வழக்கின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது எனவும் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை பெருநகரப் பகுதிகளில் அனலாக் சிக்னலை ஒளிபரப்புவதை சட்டத்திற்கு புறம்பானது என்று தெரிவித்த 10.12.2013 தேதியிட்ட இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் செய்தி குறிப்பு எண்.91/2013–ஐ எதிர்த்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழக்கு எண்.34213/2013–ல் வழக்குதொடர்ந்தது. சென்னை உயர்நீதிமன்றம் இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் நடவடிக்கைக்கு தடை விதித்ததோடு மட்டுமில்லாமல் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்குவது குறித்த 05.07.2012 தேதியிட்ட தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் விண்ணப்பத்தின் மீது உடனடியாக முடிவெடுக்குமாறு மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திற்கு ஆணையிட்டது.



மேலும், இது தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 03.06.2014 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து அளித்துள்ள கோரிக்கை மனுவின் முக்கிய கோரிக்கைகளில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்குவது குறித்த கோரிக்கையும் ஒன்றாகும். மேலும், தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறையின் இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வு குறித்த ஒரு விரிவான கடிதத்தினை அனுப்பியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 05.07.2014 அன்றும் DAS உரிமம் தொடர்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். மேலும் 7.8.2015 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்குவது குறித்த கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## 9. சென்னை மாநகரப் பகுதியை டிஜிட்டல் மயமாக்க தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எடுத்துவரும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை மாநகரப்பகுதிகளில் கேபிள் டிவி சேவையினை டிஜிட்டல் மயமாக்கிட நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென இந்நிறுவனம் கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு, சந்தாதாரர்கள் மேலாண்மை அமைப்பு மற்றும் 10 லட்சம் செட்–டாப் பாக்ஸ்களை ஓராண்டிற்கான ஒப்பந்த விலை அடிப்படையில் வாங்கிடவும், நிர்மாணிக்கவும், சோதனை செய்து அமைத்திடவும் 25.09.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியது. முதற்கட்டமாக, 50,000 செட்–டாப் பாக்ஸ்கள் வாங்கப்பட்டன. இவற்றில் 28,752 செட்–டாப் பாக்ஸ்கள், 383 கேபிள் ஆபரேட்டர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்நிறுவனம், டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறையை மேம்படுத்தவும், செட்–டாப் பாக்ஸ் வாங்கவும், கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditonal Access System -CAS) மற்றும் சந்தாதாரர் மேலாண்மை அமைப்பு ஆகியவற்றிற்காகவும் கட்டுப்பாட்டு அறை தொடர்பான இதர உபகரணங்களை வாங்கவும் ரூ.20.72 கோடி முதலீடு செய்துள்ளது.



சென்னை மாநகரப் பகுதியில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தரமுடனும் தெளிவுடனும் 90 முதல் 100 சேனல்கள் வரை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக ரூ.70/– என்ற மிகக் குறைந்த மாத கட்டணத்தில் வழங்கி வருகிறது. தற்பொழுது, சென்னை மாநகரில் 820 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக 3.4 இலட்சம் சந்தாதாரர்களுக்கு கேபிள் டிவி சேவையினை வழங்கி வருகிறது.

## 10. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இ–சேவை மையம்

தகவல் தொழில் நுட்பவியல் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் உள்ள 264 வட்டங்களில் 'அரசு இ–சேவை' மையத்தினை தொடங்கியுள்ளது. முதற்கட்டமாக, டிசம்பர் 2014ல் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள 12 வட்டங்களில் அரசு இ–சேவை மையங்கள் தொடங்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. மேலும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பிப்ரவரி 2015–ல் தமிழகத்திலுள்ள பிற வட்டங்களில் அரசு இ–சேவை மையங்களை ஏற்படுத்தி உள்ளது. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 17 இடங்களில் அரசு இ–சேவை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 50 மையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் 10 அரசு இ–சேவை மையங்கள் புதிதாக தொடங்கப்பட்ட வட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 2 அரசு இ–சேவை மையங்களை சென்னை மற்றும் மதுரை மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களில் இயக்கி வருகிறது. நாளது தேதியில் தமிழகம் முழுவதும், அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் 333 அரசு இ–சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தி வரும் இ–சேவை மையங்களுக்கு பொது மக்களிடம் பெரும் வரவேற்பு உள்ளது. இந்த குறுகிய காலகட்டத்திற்குள் இதுவரை 11.12 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர் மற்றும் அதன் பயனாக 5.55 கோடி ரூபாய் வருவாயை இச்சேவை மையங்கள் சேவை கட்டணமாக ஈட்டியுள்ளன.

**11. இணைய சேவைகள்**

**11.8.2014** அன்று தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் **110**–வது விதியின் கீழ் தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் அகண்ட அலைவரிசை மற்றும் இதர இணைய சேவைகளை உள்ளூர் கேபிள் ஆப்ரேட்டர்கள் வாயிலாக தமிழகம் முழுவதும் குறைந்த கட்டணத்தில் வழங்கும் என அறிவித்தார்கள்.




இந்த அறிவிப்பின்படி தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அகண்ட அலைவரிசை மற்றும் இணைய சேவைகளை உள்ளூர் கேபிள் ஆப்ரேட்டர்கள் வாயிலாக தமிழகம் முழுவதும் வழங்குவதற்கு இரயில் டெல் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளது. முன்னோடி திட்டமாக 35 உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டரகள் வாயிலாக 1000 இணைய இணைப்புகள் வழங்கப்பட்டு அவற்றின் சேவை தரம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இணைய இணைப்புகளை அதிக அளவில் வழங்கும் நோக்கில் உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்களிடம் இணைய சேவைகளை பிரபலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மத்திய அரசின் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்குட்பட்ட தொலைத் தொடர்புத் துறை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு இணையதள சேவை வழங்குவதற்கான ஒருங்கிணைந்த உரிமத்தினை **25.6.2015** அன்று வழங்கியுள்ளது. இந்நிகழ்வில் மேல் நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது.


## 12. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக அரசின் 25 கோடி ரூபாய் பங்கு மூலதனத்தில் துவக்கப்பட்டது. மேலும் இந்நிறுவனம் ரூ.33 கோடியை அரசிடமிருந்து கடனாக பெற்றுள்ளது. 2008–09 நிதியாண்டில் ரூ.2.44 கோடி வருவாய் ஈட்டிய தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தற்பொழுது 2013–14 நிதியாண்டில் ரூ.163.92 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. 2014–2015ல் இதன் வருவாய் ரூ.181.91 கோடியை எட்டியுள்ளது.




இந்நிறுவனம் துவங்கப்பட்டதில் இருந்து 2011–12 நிதியாண்டு வரை நஷ்டத்தில் இருந்தது. எனினும், சந்தாதாரர் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலமும், உள்ளூர் தனியார் சேனல்களின் வருவாய் மூலமும் 2012–13, 2013–14 மற்றும் 2014–15 நிதியாண்டுகளில் கணிசமான இலாபம் ஈட்டியுள்ளது.

**PROFIT AND LOSS AMOUNT IN CRORES**




### 13. செயல்பாடு குறித்த முக்கிய நிகழ்வுகள்

### 2013–14

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் துவங்கிய காலத்தில் இருந்து முதல் முறையாக 2013–14 நிதியாண்டில், முந்தைய காலகட்டத்தில் ஏற்பட்ட நஷ்டங்களை சரிசெய்து நிகர இலாபம் ஈட்டியுள்ளது. நிறுவனத்தின் வருவாயினை அதிகரிக்கும்

நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் **01.04.2013** அன்று **62.31** இலட்சம் என்றிருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, **2013–14** இறுதியில் **65.93** இலட்சம் என உயர்ந்துள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி மற்றும் விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் முறையின்படி, **2013–14** நிதியாண்டில், உள்ளூர் தொலைக்காட்சி சேனல்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்கியதன் மூலம் **2012–13**ல் **155.34** கோடியாக இருந்த வருவாய் **2013–14**ல் **163.92** கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிறுவனம் மாதம் ரூ.**15.78** கோடியினை கட்டணச்சேனல்களுக்காக மாத சந்தாவாக, அதாவது ஒரு வருடத்திற்கு ரூ.**189.36** கோடி செலுத்தி வந்தது. ஆனால் வருடாந்திர வருவாய் ரூ.**163.92** கோடி மட்டுமே இருந்தது. இதனால் வருவாய் மற்றும் செலவுத்தொகைக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த செலவினத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக, கட்டணச்சேனல்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம், **2013–14** நிதியாண்டில் மொத்தம் ரூ.**38.40** கோடி சேமிப்பு ஈட்டியுள்ளது. இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் **2013–14** நிதியாண்டில் ரூ**12.02** கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது. **2013–2014**ல் குவிக்கப்பட்ட இழப்பான ரூ.**9.83** கோடி போக ரூ.**2.18** கோடி பெற்றுள்ளது. இதில் ரூ.**1.50** கோடி ஈவுத்



தொகையாக (Dividend) தமிழக அரசுக்கு அளிக்கப் பட்டுள்ளது.

## 2014-15

2014-15ல் கட்டணச் சேனல் ஒளிபரப்பாளர்களிடம் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வாயிலாக சந்தா தொகை மேலும் குறைக்கப்பட்டு, அதனால் வருடத்திற்கு ரூ.**8.59** கோடி சேமிக்கப்படுகிறது.

**2013–14**ல் அடையப்பட்ட ரூ.**163.92** கோடி வருவாய்க்கு எதிராக **2014–15**ல் இந்நிறுவனம் ரூ.**181.91** கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

**2014–2015** நிதியாண்டில் ரூ.**24** கோடி (வரி செலுத்தும் முன்) இலாபமும் ரூ.**18.66** கோடி (வரி செலுத்திய பின்பு) நிகர இலாபமும் இந்நிறுவனம் ஈட்டியுள்ளது.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர்**